**சு.ஜெ.ந.வே.தி.ந.க.எண் எஸ்1/373/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.733/2013 பொருள் எண்:01

**சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்களுக்கு ஒய்வூதியம் வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் சென்னை மாநகராட்சி எல்லலைக்கு உட்பட்ட ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் **518** முதியோர்கள், **273** விதவைகள் மற்றும் **48** மாற்றுத் திறனாளிகள் ஆக மொத்தம் **839** பயனாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் வறுமை நிலையை கண்டறிந்து அவர்களுக்கு ஒய்வூதியம் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசின் இந்திரா காந்தி தேசிய முதியோர் மற்றும் விதவை ஓய்வூதிய திட்ட நிதியிலிருந்து **839** பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**ஐந்து வட்டாட்சியர் அவர்களால் செப்டம்பர்– 2013 மாதத்தில் கண்டறியப்பட்ட பயனாளிகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

| வ. எண் | வட்டாட்சியர்அலுவலகப் பெயர் | முதியோர் ஒய்வூதியம் | விதவை ஒய்வூதியம் | மாற்றுத் திறனாளி ஒய்வூதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | எழும்பூர்–நுங்கம்பாக்கம் | 48 | 59 | – | 107 |
| 2 | கோட்டை–தண்டையார்பேட்டை | 96 | 56 | 15 | 167 |
| 3 | மாம்பலம்–கிண்டி | 101 | 42 | 5 | 148 |
| 4 | மைலாப்பூர்–திருவல்லிக்கேணி | 11 | 15 | 5 | 31 |
| 5 | புரசைவாக்கம்–பெரம்பூர் | 262 | 101 | 23 | 386 |
| | மொத்தம் | 518 | 273 | 48 | 839 |

இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இதுவரை **2,39,940** பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேலே குறிப்பிட்டுள்ள **839** பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் **2,39,941** முதல் **2,40,779** வரை வறுமைக்கோட்டு எண் வழங்கப்பட வேண்டும்.

மேலும், ''மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அம்மா திட்டம்'' மூலம் பயனாளிகள் விண்ணப்பித்திருப்பதால் அவசரம், அவசியம் கருதி மேற்குறிப்பிட்டுள்ள **518** முதியோர்கள், **273** விதவைகள் மற்றும் **48** மாற்றுத் திறனாளிகளுக்குமாக ஆக மொத்தம் **839** பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் **2,39,941** முதல் **2,40,779** வரை வறுமைக்கோட்டு எண் வழங்கியதற்கு, நிலைக்குழு(கல்வி) மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**"13.11.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.46/2013, நாள்13.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.5.ந.க.எண்.இ4/7696/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.10.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.734/2013 **பொருள் எண்: 02**

**தானப்பத்திரம்**

திரு. ப்பி. சோமு, வார்டு – 51, பழைய எண். 31, புதிய எண்.79, கல்லறை சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21, R.S.No.1757/28, பிளாக் எண்.25, தண்டையார்பேட்டை கிராமத்தில் குடியிருப்பு கட்ட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–IIன்'' மூலம் இச்சாலையை 13.00 மீட்டர் அகலத்திலிருந்து 18.00 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 4.88 மீட்டர் அகலத்திற்கும், 2.50 மீட்டர் நீளத்திற்கும் இடத்தினை தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இது சம்பந்தமாக கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 4.88 மீ அகலத்திற்கு 2.50 நீளத்தற்கும் 12.20 ச.மீ. பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–5ல் பரிந்து செய்து (தீர்மான எண்.76) 15.04.2013 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆகவே,

(1) கட்டட உரிமையாளர் திரு. ப்பி. சோமு, அவர்களின் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 12.20 ச.மீ. பரப்பளவு நிலத்தினை R.S.No.1757/ 28, பிளாக் எண்.25, தண்டையார்பேட்டை கிராமம் சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.10,000/– கட்டட உரிமையாளரிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்,

(3) கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழை'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''11.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.21/2013, நாள்.11.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.5.ந.க.எண்.இ4/7697/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.10.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.735/2013 **பொருள் எண்: 03**

**தானப்பத்திரம்**

திரு. எ. ஆதிக் அலி, வார்டு – **50**, பழைய எண். **85**, புதிய எண்.**185**, மன்னார் சாமி கோயில் சாலை, ராயபுரம் சென்னை–**13**, R.S.No.988/2, பிளாக் எண்.**17**, தண்டையார்பேட்டை கிராமத்தில் வணிகவளாகம் கட்ட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–**5**ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–IIன்" மூலம் இச்சாலையை **21.50** மீட்டர் அகலத்திலிருந்து **30.50** மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக **6.10** மீட்டர் அகலத்திற்கும் **4.50** மீட்டர் நீளத்திற்கும் இடத்தினை தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் **6.10** மீ அகலத்திற்கு **4.50** நீளத்தற்கும் **27.45** ச.மீ. பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–**5**ல் பரிந்து செய்து (தீர்மான எண்.**1**, நாள்.**10.05.2013**) தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆகவே,

**(1)** கட்டட உரிமையாளர் திரு. எ. ஆதிக் அலி, அவர்களின் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் **27.45** ச.மீ. பரப்பளவு நிலத்தினை R.S.No.988 / 2, பிளாக் எண்.**17**, தண்டையார்பேட்டை கிராமம் சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,

**(2)** தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.**20,000/–**ஐ கட்டட உரிமையாளரிடம் "ஆணையர் சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் காசோலையாக பெறவும்,

**(3)** கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு " வளர்ச்சி உரிமை சான்றிதழை" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**11.11.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.**22/2013**, நாள்.**11.11.2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.14.ந.க.எண்.WD14/0055/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.09.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.736/2013 **பொருள் எண்: 04**

**தானப்பத்திரம்**

திருவாளர்கள். வள்ளி முத்து மற்றும் ஐந்து நபர்கள் சர்வே எண்.134/1A1, 1A2, 1A3, 1A4, 1A5, 1A6, 1A7 மற்றும் 1B (பகுதி), பெருங்குடி கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு மனை பிரிவு வேண்டி மண்டலம்–14ல் விண்ணப்பித்துள்ளார். இவர்கள் மனை பிரிவு வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு வழியினை ஏற்படுத்துவதற்கு வேண்டி தங்களின் நிலத்தில் இருந்து 389.35ச.மீ பரப்பளவு உள்ள (7.32X 53.20 = 389.43ச.மீ) நிலத்தினை சாலையாக அமைப்பதற்கு தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளனர். இவ்வாறு அமைய உள்ள சாலையினை உருவாக்குவதற்கு தேவையான அபிவிருத்திக் கட்டணத்தையும் செலுத்துவதற்கு இசைவு தெரிவித்துள்ளனர்.

இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வதற்கு வார்டு குழு, மண்டலம்–14ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (தீர்மானம் எண்.24, நாள்: 07.01.2013)

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெறுவதற்கு,

1. மனை உரிமையாளர்கள் திருவாளர்கள் வள்ளிமுத்து மற்றும் ஐந்து நபர்கள் மூலமாக இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 389.43 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சி தானமாக பெறுவதற்கும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.5,72,000/–ஐ மனை உரிமையாளர்களிடம் இருந்து ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''11.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.20/2013, நாள்.11.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.அ1/7279/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 01.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.737/2013 பொருள் எண் :05

**சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு மதிப்பெண்கள் தரவரிசை அடிப்படையில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது – இக்கல்வியாண்டில் 2013 இத்தொகையினை உயர்த்தி வழங்கஅனுமதி.**

சென்னை மாநகராட்சி கல்வித்துறை, சென்னை உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவ / மாணவியர்கள் மேற்படிப்பு தொடர அரசு பொதுத்தேர்வு மதிப்பெண்கள் தரவரிசை அடிப்படையில் மாணவ / மாணவியர்களை தேர்வு செய்து மருத்துவம் / பொறியியல் துறை / ஆசிரியர் பயிற்சி / செவிலியர் பயிற்சி / மூன்றாண்டு பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு (Diploma) / சட்டக்கல்வி (B.L.,)போன்ற துறைகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| Medical / Engineering Courses | 25,000X50 | 12,50,000/- |
| Nursing Courses / D.T.Ed., | 5,000X50 | 2,50,000/- |
| Arts / Science Courses (3 Yr. Degree) | 3,000X100 | 3,00,000/- |
| Diploma Courses (3 Years) | 3,000X50 | 1,50,000/- |
| B.L., | 5,000X15 | 75,000/- |
| (Rupees Twenty Seven Lakhs Only) | | 20,25,000-/ |

மேற்குறிப்பிட்ட ஊக்கத்தொகை தற்பொழுது கல்வி கட்டணம் மற்றும் இதர செலவீனங்கள் அதிகரித்துள்ளதால் அதன் அடிப்படையில் உயர்த்தி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகையின் விவரம்**

| வ எண் | படிப்பு | தற்பொழுது வழங்கப்படும் உதவித்தொகை | உயர்த்திய பின் உதவித் தொகை | பயனாளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | B.E.,/M.B.B.S.,/B.V.Sc.,/B.D.S., | 25,000 /- | 45,000/- | 50 | **22,50,000/–** |
| 2 | B.L., | 5,000/- | 10,000-/ | 15 | **1,50,000/–** |
| 3 | Nursing/ Teacher Traing | 5,000/- | 10,000-/ | 50 | **5,00,000/–** |
| 4 | M.Sc.,/C.Sc.,/IT., (5 years) | --- | 25,000/- | 10 | **2,50,000/–** |
| 5 | Diploma Courses | 3,000 /- | 7,000/- | 50 | **3,50,000/–** |
| 6 | B.A.,/B.Sc.,/B.Com.,/ B.B.A., | 3,000 /- | 7,000/- | 100 | **7,00,000/–** |
| | **Total ( Fourty two lakhs only)** | | | | **42,00,000/–** |

எனவே,

1. 2013–ம் ஆண்டு முதல் உயர்கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி உதவி தொகை உயர்த்தி வழங்க அனுமதியும்,
2. இச்செலவீனத்தொகை ரூ.42,00,000/– (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சம் மட்டும்) முன்பணமாக கணக்கு குறியீட்டு எண்.460–50–01–19ல் கல்வி அலுவலர் அவர்களின் பெயரில் பெற்று சம்பந்தப்பட்ட மாணவ / மாணவியருக்கு வழங்கவும்,
3. முன்பணமாக பெற்ற தொகையினை பின்னர் கணக்கு குறியீட்டு எண்.230 இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவீனங்கள் E-F4–80–82–01, 230–11–01–01 கல்வித்தர மேம்பாடு உயர்நிலைக்கல்வி என்ற தலைப்பில் நேர்செய்யவும் ,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘13.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.42/2013, நாள்13.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 572/2013, நாள் 19.11.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி3/131023–109(அ)/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.10.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.738/2013 பொருள் எண் :06

**சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சிறப்பு வகுப்புகள் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள்– சிற்றுண்டி (சுண்டல்) வழங்க வேண்டுதல் – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

சென்னை பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவிகள் 2014ஆம் ஆண்டு மார்ச்/ஏப்ரல் மாதங்களில் பொதுத்தேர்வினை எதிர்நோக்க உள்ளனர். இம்மாணவர்களுக்கு மாலை 4 மணிக்கு மேல் 6 மணி வரை ஆசிரியர்களின் வழி காட்டுதலில் மேற்பார்வை வகுப்புகள் வழக்கமாக நடைபெறுகிறது. இம்மாணவர்கள் அயற்சியை போக்கும் விதமாக மேலும் கற்றலின் முழு அடைவினை பெறுவதின் பொருட்டும் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டது போலவே இவ்வாண்டும் மாலை 4 மணியளவில் சுண்டல் வழங்கி கற்றல் நிகழ்வினை தொடர வணக்கத்திற்குரிய மேயர், முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் விருப்பத்துடன் சுவைத்து மகிழ வாரத்தின் 5 நாட்களுக்கும் ஐந்து வகையான சுண்டல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வகையில் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு ரூ.4.50 செலவினம் எதிர்நோக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின் கீழ் செயல்படும் 32 மேல்நிலை, 38 உயர்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 70 பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கும் சுண்டல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வகையில் சுண்டல் தயாரிப்பதற்காக தானியம் வாங்க மற்றும் சுண்டல் சமைத்து வழங்கிட ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு ரூ. 4.50 என நிர்ணயிக்கப்படுகிறது.

70 பள்ளிகளில் பயிலும் 14,727 மாணவ/மாணவிகளுக்கு இவ்வகையில் சுண்டல் வழங்க நவம்பர் 2013 முதல் மார்ச் 2014 வரை (10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 100 நாட்களுக்கு, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 90 நாட்களுக்கு) ரூ. 63,41,490/– செலவினம் எதிர்பார்க்கப்படுகிறது. செலவின விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**மொத்த செலவின விவரம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 10ஆம் வகுப்பு | 8,379 | ரூ.4.50 | ரூ.37,705.50 | 100 | 37,70,550/– |
| 12ஆம் வகுப்பு | 6,348 | ரூ.4.50 | ரூ.28,566.00 | 90 | 25,70,940/– |
| | | | | மொத்தம்– | 63,41,490/– |

**முதல் தவணையாக காசோலை பெற செலவின விவரம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 10ஆம் வகுப்பு | 8,379 | ரூ.4.50 | ரூ.37,705.50 | 71 | 26,77,090.50 |
| 12ஆம் வகுப்பு | 6,348 | ரூ.4.50 | ரூ.28,566.00 | 71 | 20,28,186.00 |
| | | | | மொத்தம்– | 47,05,276.50 |

**இரண்டாவது தவணையாக காசோலை பெற செலவின விவரம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 10ஆம் வகுப்பு | 8,379 | ரூ.4.50 | ரூ.37,705.50 | 29 | 10,93,459.50 |
| 12ஆம் வகுப்பு | 6,348 | ரூ.4.50 | ரூ.28,566.00 | 19 | 5,42,754.00 |
| | | | | மொத்தம் | 16,36,213.50 |

இச்செலவினம் தலைமையாசிரியர்கள் மூலமாக அவரவர் பள்ளிகளிலேயே சுண்டல் தயாரித்து வழங்கும் விதத்தில் மாணவ/மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப செலவினம் மேற்கொண்டு வாரம் ஒருமுறை உரிய இரசீதுகளை கல்வித்துறைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சுண்டல் வழங்கும் இத்திட்டத்தினை 70 சென்னை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நவம்பர் 2013 முதல் மார்ச் 2014 வரை செயல்படுத்தவும்,
2. ஒரு மாணவருக்கு ரூபாய் 4.50 வீதம் 10ஆம் வகுப்பில் பயிலும் 8379 மாணவர்களுக்கு 100 நாட்களுக்கு ரூ.37,70,550/–ம், 12ஆம் வகுப்பில் பயிலும் 6348 மாணவர்களுக்கு 90 நாட்களுக்கு ரூ.25,70,940/–ம் ஆக மொத்தம் ரூ. 63,41,490/–க்கு அனுமதியும்,
3. மேலும் 71 நாட்களுக்கு (நவம்பர், டிசம்பர்–2013, ஜனவரி–2014 ஆகிய மூன்று மாதங்களுக்கு விடுமுறை நாட்கள் தவிர) முன்பணமாக கணக்கு குறியீடு எண். 460–50–01–19 Advance recoverable expenses என்ற தலைப்பில் ரூ.47,05,277/–ஐ முதல் முன்பணமாகவும், பிப்ரவரி–2014 மற்றும் மார்ச்–2014 ஆகிய இரு மாதங்களுக்கு (விடுமுறை நாட்கள் தவிர) பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு 29 நாட்களுக்கும் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு 19 நாட்களுக்கும் கணக்கு குறியீடு எண். 460–50–01–19 Advance recoverable expenses என்ற தலைப்பில் ரூ.16,36,213.00ஐ இரண்டாவது முன்பணமாக பெறவும்,
4. இத்தொகையினை கல்வி அலுவலர் அவர்களின் பெயரில் வழங்கவும், இத்தொகையை கணக்கு குறியீட்டு எண் E-80–82–01, 230–11–01–01 கல்வி தர மேம்பாடு – சிறப்பு வகுப்புகள் என்ற நிதி ஒதுக்கீட்டில் நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘13.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.44/2013, நாள்13.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 574/2013, நாள் 19.11.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி3/131023–109 (ஆ) /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.10.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.739/2013 பொருள் எண் : 07

**சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சிறப்பு வகுப்புகள் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் – நவம்பர் 2013 முதல் மார்ச் 2014 – சென்னை நகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட பள்ளிகளுக்கு சிற்றுண்டி (சுண்டல்) வழங்க – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

சென்னை பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவிகள் 2014 மார்ச்/ஏப்ரல் மாதங்களில் பொதுத்தேர்வினை எதிர்நோக்க உள்ளனர். இம்மாணவர்களுக்கு மாலை 4 மணிக்கு மேல் 6 மணி வரை ஆசிரியர்களின் வழி காட்டுதலில் மேற்பார்வை வகுப்புகள் வழக்கமாக நடைபெறுகிறது. இம்மாணவர்கள் அயற்சியை போக்கும் விதமாக மேலும் கற்றலின் முழு அடைவினை பெறுவதின் பொருட்டும் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டது போலவே இவ்வாண்டும் மாலை 4 மணியளவில் சுண்டல் வழங்கி கற்றல் நிகழ்வினை தொடர வணக்கத்திற்குரிய மேயர், முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி திட்டமிடப்பட்டுள்ளது.

மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியில் அமைந்துள்ள 7 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 1 மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு இத்திட்டம் 01.11.2013 முதல் 31.03.2014 வரை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

502 மாணவர்களுக்கு சுண்டல் வழங்க ஆகும் செலவினம் ஒரு நாளைக்கு ரூ.4.50 என 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 100 நாட்களுக்கும், 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 90 நாட்களுக்கும் மொத்த செலவினம் ரூ.2,22,030/– எதிர்பார்க்கப்படுகிறது.

**மொத்த செலவினம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 10ஆம் வகுப்பு | 416 | ரூ.4.50 | ரூ.1,872 | 100 | 1,87,200/– |
| 12ஆம் வகுப்பு | 86 | ரூ.4.50 | ரூ. 387 | 90 | 34,830/– |
| | | | | மொத்தம் | 2,22,030/– |

**முதல் தவணையாக காசோலை பெற செலவினம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 10ஆம் வகுப்பு | 416 | ரூ.4.50 | ரூ.1,872 | 71 | 1,32,912/– |
| 12ஆம் வகுப்பு | 86 | ரூ.4.50 | ரூ.387 | 71 | 27,477/– |
| | | | | மொத்தம் | 1,60,389/– |

**இரண்டாவது தவணையாக காசோலை பெற செலவினம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 10ஆம் வகுப்பு | 416 | ரூ.4.50 | ரூ.1,872 | 29 | 54,288/– |
| 12ஆம் வகுப்பு | 86 | ரூ.4.50 | ரூ.387 | 19 | 7,353/– |
| | | | | மொத்தம் | 61,641/– |

இச்செலவினம் தலைமையாசிரியர்கள் மூலமாக அவரவர் பள்ளிகளிலேயே சுண்டல் தயாரித்து வழங்கும் விதத்தில் மாணவ/மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப செலவினம் மேற்கொண்டு உரிய இரசீதுகளை கல்வித்துறைக்கு சமர்ப்பித்து செலவினத்தொகையை பெற்றுக்கொள்ள முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே,

1. சுண்டல் வழங்கும் இத்திட்டத்தினை சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட 8 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 01.11.2013 முதல் 31.03.2014 வரை செயல்படுத்தவும்,

2. ஒரு மாணவருக்கு ரூபாய் 4.50 வீதம் 10ஆம் வகுப்பில் பயிலும் 416 மாணவர்களுக்கு 100 நாட்களுக்கு ரூ.1,87,200/–ம் 12ஆம் வகுப்பில் பயிலும் 86 மாணவர்களுக்கு 90 நாட்களுக்கு ரூ.34,830/–ம் ஆக மொத்தம் ரூ. 2,22,030/–க்கு அனுமதியும்,

3. மேலும் 71 நாட்களுக்கு (நவம்பர், டிசம்பர் 2013 ஜனவரி 2014 ஆகிய மூன்று மாதங்களுக்கு விடுமுறை நாட்கள் தவிர) முன்பணமாக கணக்கு குறியீடு எண்.460–50–01–19 Advance recoverable expenses என்ற தலைப்பில் ரூ.1,60,387/–ஐ முதல் முன்பணமாகவும், பிப்ரவரி 2014 மற்றும் மார்ச் 2014 ஆகிய இரு மாதங்களுக்கு பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு 29 நாட்களுக்கும் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு 19 நாட்களுக்கும் (விடுமுறை நாட்கள் தவிர) கணக்கு குறியீடு எண். 460–50–01–19 Advance recoverable expenses என்ற தலைப்பில் ரூ.61,641/–ஐ இரண்டாவது முன்பணமாக பெறவும்,
4. இத்தொகையினை கல்வி அலுவலர் அவர்களின் பெயரில் வழங்கவும், இத்தொகையை கணக்கு குறியீட்டு எண் E-80–82–01, 230–11–01–01 கல்வி தர மேம்பாடு – சிறப்பு வகுப்புகள் என்ற நிதி ஒதுக்கீட்டில் நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''13.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.45/2013, நாள்13.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 575/2013, நாள் 19.11.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.சு.து/ந.க.எண்/336/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 06.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.740/2013 பொருள் எண்.08

**பொதுசுகாதாரத்துறை– அம்மா உணவகங்கள் – 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்கள் – முறையே 200 அம்மா உணவகங்களுக்கும் – கொள்முதல் செய்து பொருத்த– மாமன்ற தீர்மானம் பெறப்பட்டது – திருத்திய விலைப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களில் உள்ள 200 அம்மா உணவகங்களுக்கும் 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்கள், தமிழ் நாடு அரசு நிறுவனமான Ms.ELCOT (Electronics Corporation of Tamil Nadu.ltd) மூலம் ரூபாய் 1,07,39,000/– (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சத்து முப்பத்தி ஒன்பது ஆயிரம் மட்டும்) செலவில் கொள்முதல் செய்து பொருத்த கடந்த 26.07.2013 அன்று மாமன்ற தீர்மானம் (தீர்மான எண் 483/2013) நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது Ms.ELCOT நிறுவனம் கடந்த 10.10.2013 அன்று அளித்துள்ள விலைப் புள்ளியின்படி (எண்: P/C20/002/006/2013-14/903) 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்கள் 200 அம்மா உணவகங்களிலும் கொள்முதல் செய்து பொருத்த ரூபாய் 1,33,36,675 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தி மூன்று இலட்சத்து முப்பத்தி ஆறு ஆயிரத்து அறுநூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) செலவு ஆகும் என மேற்பார்வை பொறியாளர்/மின்சாரம் (பொ) அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 200 அம்மா உணவகங்களுக்கும் 600 மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) கேமிராக்கள், Ms.ELCOT நிறுவனம் மூலம் திருத்திய விலைப்புள்ளியின் படி ரூபாய் 1,33,36,675/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தி மூன்று இலட்சத்து முப்பத்தி ஆறு ஆயிரத்து அறுநூற்று எழுபத்தி ஐந்து மட்டும்)க்கு கொள்முதல் செய்து பொருத்த நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''18.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.559/2013, நாள் 18.11.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 576/2013, நாள் 19.11.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மி.து.ந.க.எண்.பிமே2/பி1/11951/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 06–11–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.741/2013 பொருள் எண்:09

**கம்பியில்லா தகவல் தொடர்பு – Walkie-Talkie – வழங்குவது நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகராட்சியில் VHF முறையில் கம்பியில்லா தொடர்பு, இரண்டு அதிர்வெண்களில் (Frequency) இயங்கி வருகிறது.

தற்பொழுது கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் உயர் அதிகாரிகள், மேற்பார்வை பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள் மற்றும் மண்டல செயற் பொறியாளர்களின் வாகனங்களில் பொருத்தப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கையில் தற்பொழுதுள்ள wireless சாதனங்கள் எதிர்பார்க்கப்பட்ட பயன் அளவு எட்டப்பட்டு இருப்பதால், இதன் பயன் கருதி மற்ற அதிகாரிகளுக்கும் இவ்வசதி வழங்கப்பட்டால் மாநகராட்சியின் செயல்திறன் அதிகரிக்கும் நிலை ஏற்படும் என்பதால், கீழ்கண்ட அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்டது.

“கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் (wireless) மண்டல அலுவலர்கள், செயற் பொறியாளர்களுக்கு மட்டும் அல்லாமல், செயல் திறன் மேம்பட உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள்/ உதவி பொறியாளர்கள் நிலையில் உள்ள அனைவருக்கும் வழங்கப்படும்”

2013–2014 நிதி நிலை அறிக்கையின்படி, கீழ்கண்ட சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**மண்டலம்1 முதல் 15 முடிய**

| | | | |
|---|---|---|---|
| 1) | வணக்கத்திற்குரிய மேயர், முதன்மை செயலர்/ஆணையர், இணை/துணை ஆணையர்கள் மற்றும் வட்டார இணை/துணை ஆணையர்கள் | – | 8 |
| 2) | தலைமை பொறியாளர் மற்றும் அனைத்து துறை தலைவர்கள் | – | 15 |
| 3) | மண்டல அலுவலர்கள் | – | 15 |
| 4) | மண்டல செயற்பொறியாளர்கள் | – | 30 |
| 5) | பகுதி உதவி செயற் பொறியாளர்கள் | – | 45 |
| 6) | வார்டு உதவி பொறியாளர்/இளநிலை பொறியாளர் | – | 200 |
| 7) | பகுதி துப்புரவு மேற்பார்வையாளர்கள் | – | 45 |
| 8) | வார்டு துப்புரவு ஆய்வாளர்கள் | – | 200 |
| 9) | சுகாதார அலுவலர்கள் | – | 15 |
| 10) | சுகாதார ஆய்வாளர்கள் | – | 200 |
| 11) | உதிரிகள் | – | 27 |
| | மொத்தம் | – | 800 |

ஆகமொத்தம் தேவைப்படும் Walkie-Talkie சாதனங்கள் 800 எண்ணிக்கை ஆகும். கம்பியில்லா தொடர்பு மூலம் Walkie-Talkie பயன்படுத்த மிக முக்கியமாக கீழ்கண்ட இரண்டு கூறுகள் (factors) தீர்மானிக்கப்பட வேண்டும்.

1)அதிர்வெண்களின் எண்ணிக்கை( Number of frequency)

2)ரிப்பீட்டர்(repeater) நிறுவ வேண்டிய இடங்கள்

சென்னை மாநகராட்சியின் பரப்பளவு 434 சதுரகிலோமீட்டராக உள்ளதால் குறைந்தது 3 அதிர்வெண்கள் (frequency) மற்றும் ஆன்ட்டனா மிக உயரமாக உள்ள கட்டிடம் அல்லது கோபுரத்தில் அமைத்தால் தான் சென்னை மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் கம்பியில்லா தகவல் தொடர்பு ஏற்படுத்த இயலும்.

ஆகையால் Walkie-Talkie மூலம் தகவல் தொடர்பு ஏற்படுத்த, வடிவமைத்து, நிறுவி, இயக்கி, பராமரிப்பு (Design.Build, operate, Maintain- DBOM) முறையில் ஒப்பம் கோரலாம் என்று கருதப்படுகிறது.

அதிர்வெண்கள் மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டும். அதற்கு வருடந்தோறும் உரிமம் (License) மற்றும் உரிமை ஊதியத் ( Royalty) தொகை மத்திய அரசிற்கு செலுத்த வேண்டி வரும். மேற்கண்ட முறையை பயன்படுத்த செலவாகும் தொகையினை தோராயமாக கீழ்கண்டவாறு கணக்கிடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | ஒரு Walkie-Talkieகருவியின் விலை ரூ.15,000/—(நவீன வசதிகளுடன் கூடியது)<br>800 எண்ணிக்கை Walkie-Talkieகருவிகளின் விலை<br>(3 வருட உத்திரவாதத்துடன் battery தவிர்த்து) | ரூ.1,20,00,000/— |
| 2) | ரிப்பீட்டர் மற்றும் ஆன்ட்டனா நிறுவுவதற்கான செலவினம்<br>3 வருட பராமரிப்புடன் | ரூ.6,00,000/— |
| 3) | நிறுவுவதற்கான கட்டணம்(installation charges) | ரூ.1,00,000/— |
| 4) | அதிர்வெண்கள் பெறுவதற்கான தொடர்பு கட்டணம் | ரூ.50,000/— |
| 5) | அதிர்வெண்கள் பெற மத்திய அரசிற்கு செலுத்த வேண்டிய<br>உரிமத் தொகை ஓராண்டிற்கு( License fee) | ரூ. 2,00,000/— |
| 6) | 3 அதிர்வெண்கள் பெற மத்திய அரசிற்கு செலுத்த வேண்டிய<br>உரிமைத் தொகை ஓராண்டிற்கு(Royalty fee) | ரூ.50,00,000— |
| | தோராய மதிப்பீடு | ரூ.1,79,50,000/— |

கம்பியில்லா தொடர்பு நிறுவவும், 800 Walkie-Talkie கருவிகள் கொள்முதல் செய்து அதற்கான அதிர்வெண்கள் பெறவும் மற்றும் இதர செலவினங்களுடன் சேர்த்து ஆகும் தோராய செலவீனம் ரூ.1,79,50,000/—ஆகும்.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள அதிகாரிகளுக்கு Walkie-Talkie வழுங்கவும், இதற்கான செலவீனத்தை மின்துறையின் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தோராய செலவினம் ரூ1,79,50,000/—க்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''18.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.567/2013, நாள் 18.11.2013—ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 578/2013, நாள் 19.11.2013—ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/3298/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.10.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.742/2013 **பொருள் எண்.10**

**<u>அரசாணை அமலாக்கம்</u>**

அரசாணை எண். 412 நிதி (படிகள்) துறை நாள். 17.10.2013ல் தமிழ்நாடு பொது சேமநல நிதி விதிகள், விதி எண். 30ல் கீழ்கண்டுள்ள திருத்தம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வரசாணையில் பொது சேமநல நிதி பிடித்தம் செய்யப்படும் பணியாளரின் வாரிசுதாரர் பணியாளருக்கு முன்பாகவே இறக்க நேரிட்டால், இறந்த வாரிசுதாரரின் பங்கு இதர வாரிசுதாரர்களுக்கு சமமாக வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இவ்வரசாணை சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதால், அரசாணை எண்.412 நிதி(படிகள்) துறை, நாள்.17.10.2013னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 571/2013, நாள் 19.11.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி2/3344/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 08.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.743/2013 **பொருள் எண்:11**

**மண்டலம்–2, வார்டு–16, ஆண்டாற்குப்பத்தில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் ஏற்கனவே உள்ள கட்டடத்தை (பகுதி) இடிக்கவும் மற்றும் 3+3 வகுப்பறைகள் மற்றும் மாடிப்படி கட்டும் பணி மதிப்பீட்டிற்கு அனுமதி**

வார்டு எண் : 16 மண்டலம் : 2

| | |
|---|---|
| பணியின் பெயர் | கட்டடத்துறை – மண்டலம்–2, வார்டு–16, ஆண்டாற்குப்பத்தில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் ஏற்கனவே உள்ள கட்டடத்தை (பகுதி) இடித்துவிட்டு 3+3 வகுப்பறைகள் மற்றும் மாடிப்படி கட்டும் பணி. |
| பரிந்துரை செய்தவரின் விவரம் | 2013-2014 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அறிவிப்பு எண்.54 |
| எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | கல்வித்துறை |
| மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது |
| மதிப்பீட்டுத் தொகை | ரூ. 90,15,000.00 |
| அ) கட்டுமான பணி செலவினம் | ரூ. 77,89,654.61 |
| ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 7,78,965.45 |
| இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 1,94,741.36 |
| ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | ரூ. 1,93,269.72 |
| உ) மின்சாரம் / மற்றபிற இனங்கள் | ரூ. 35,000.00 |
| ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | ரூ. 23,368.96 |
| ஒரு சதுர அடிக்கு ஆகும் செலவு<br>அ) ஒரு மீட்டருக்கு செலவு | கடைக்கால் – ரூ.583/- / சதுர அடி<br>தரைதளம் – ரூ.898/- / சதுர அடி<br>முதல் தளம் – ரூ.869/- / சதுர அடி |
| மதிப்பீட்டிற்கு பரிந்துரைத்த வார்டுகுழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள். | பெறப்படவுள்ளது |
| நிதியின் மூலத்தன்மை | கட்டடத்துறை – மூலதனநிதி |
| இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ 90,15,000.00 |
| இடிக்கப்படவுள்ள கட்டடத்தின் புத்தக மதிப்பு | பிளாக்–1 – ரூ.6,000/–<br>பிளாக்–2 – ரூ.4,500/–<br>பிளாக்–3 – ரூ.4,500/–<br>பிளாக்–4 – ரூ.4,000/– |
| கழிவுத் தொகை | ரூ.7,000/– |
| இடிக்கப்படவுள்ள கட்டடம் கட்டப்பட்ட ஆண்டு | தோராயமாக 20 ஆண்டுகளுக்கு முன் நகராட்சியால் கட்டப்பட்டது |
| கட்டடத்தின் பரப்பளவு | பிளாக்–1 – 92.5 ச.மீ.<br>பிளாக்–2 – 74.1 ச.மீ.<br>பிளாக்–3 – 74.1 ச.மீ.<br>பிளாக்–4 – 72 ச.மீ. |

| | |
|---|---|
| கட்டடம் பயன்பாட்டில் உள்ளதா ? | பிளாக்–1 மற்றும் பிளாக்–4 உபயோகத்தில் இல்லை.<br>பிளாக்–2 மற்றும் பிளாக்–3 உபயோகத்தில் உள்ளது (பழுதடைந்துள்ளது). |
| கட்டடம் இடித்தபின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | பள்ளிக் கட்டடம் |
| இடிப்பதற்கு அவசியம் என்ன ? | கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது |

மேற்கண்ட பணிக்காக 2013–2014ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.90,15,000/–க்கு (ரூபாய் தொண்ணூறு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கும் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டடத்தை (பகுதி) இடிப்பதற்கும் தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''13.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.47/2013, நாள்13.11.2013–ன்படி வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''18.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.569/2013, நாள் 18.11.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 585/2013, நாள் 19.11.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி2/3499/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 08.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.744/2013 **பொருள் எண்:12**

**மண்டலம்–2, வார்டு–16, குளக்கரை தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் ஏற்கனவே உள்ள கட்டடத்தை (பகுதி) இடிக்கவும் மற்றும் 3+3 வகுப்பறைகள் மற்றும் மாடிப்படி கட்டும் பணி மதிப்பீட்டிற்கு அனுமதி**

வார்டு எண் : 16 மண்டலம் : 2

| | |
|---|---|
| பணியின் பெயர் | கட்டடத்துறை – மண்டலம்–2, வார்டு–16, குளக்கரை தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் ஏற்கனவே உள்ள கட்டடத்தை (பகுதி) இடித்துவிட்டு 3+3 வகுப்பறைகள் மற்றும் மாடிப்படி கட்டும் பணி |
| பரிந்துரை செய்தவரின் விவரம் | 2013-2014 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.<br>அறிவிப்பு எண்.54 |
| எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | கல்வித்துறை |
| மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது |
| மதிப்பீட்டுத் தொகை | ரூ. 89,50,000.00 |
| அ) கட்டுமான பணி செலவினம் | ரூ. 77,32,463.75 |
| ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 7,73,246.38 |
| இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 1,93,311.59 |
| ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | ரூ. 1,92,780.89 |
| உ) மின்சாரம் / மற்றபிற இனங்கள் | ரூ. 35,000.00 |
| ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | ரூ. 23,197.39 |
| ஒரு சதுர அடிக்கு ஆகும் செலவு<br>(அ) ஒரு மீட்டருக்கு செலவு | கடைக்கால் – ரூ.583/- / சதுர அடி<br>தரைதளம் – ரூ.898/- / சதுர அடி<br>முதல் தளம் – ரூ.869/- / சதுர அடி |
| மதிப்பீட்டிற்கு பரிந்துரைத்த வார்டுகுழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள். | பெறப்படவுள்ளது. |
| நிதியின் மூலத்தன்மை | கட்டடத்துறை – மூலதனநிதி |
| இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ 89,50,000.00 |
| இடிக்கப்படவுள்ள கட்டடத்தின் புத்தக மதிப்பு | பிளாக்–1 – ரூ.6,500/–<br>பிளாக்–2 – ரூ.5,000/–<br>பிளாக்–3 – ரூ.5,000/–<br>பிளாக்–4 – ரூ.4,500/– |
| கழிவுத் தொகை | ரூ.7,000/– |
| இடிக்கப்படவுள்ள கட்டடம் கட்டப்பட்ட ஆண்டு | தோராயமாக 20 ஆண்டுகளுக்கு முன் நகராட்சியால் கட்டப்பட்டது |
| கட்டடத்தின் பரப்பளவு | பிளாக்–1 – 43.2 ச.மீ.<br>பிளாக்–2 – 9.24 ச.மீ.<br>பிளாக்–3 – 72.0 ச.மீ.<br>பிளாக்–4 – 18 ச.மீ. |

| | |
|---|---|
| கட்டடம் பயன்பாட்டில் உள்ளதா ? | பிளாக்–1 மற்றும் பிளாக்–2 உபயோகத்தில் இல்லை.<br>பிளாக்–3 மற்றும் பிளாக்–4 உபயோகத்தில் உள்ளது (பழுதடைந்துள்ளது). |
| கட்டடம் இடித்தபின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | பள்ளிக் கட்டடம் |
| இடிப்பதற்கு அவசியம் என்ன ? | கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. |

மேற்கண்ட பணிக்காக 2013–2014ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.89,50,000/–க்கு (ரூபாய் எண்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கும் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டடத்தை (பகுதி) இடிப்பதற்கும் தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘13.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.48/2013, நாள்13.11.2013–ன்படி வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘18.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.570/2013, நாள் 18.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 586/2013, நாள் 19.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி2/2969/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 05.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.745/2013 பொருள் எண்:13

**திருத்திய மதிப்பீடு**

வார்டு எண் : 20 மண்டலம் : 2

| | |
|---|---|
| பணியின் பெயர் | கட்டடத்துறை – மண்டலம்–2, வார்டு–20, மணலி, காமராஜர் சாலையில் வாகன இயக்கூர்தி நிலையம் கட்டும் பணி |
| பரிந்துரை செய்தவரின் விவரம் | வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012-13 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண்.59 |
| எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | இயந்திரப்பொறியியல் துறை |
| மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது |
| மதிப்பீட்டுத் தொகை | ரூ 4,96,80,000.00 |
| அ) கட்டுமான பணி செலவினம் | ரூ. 4,26,95,349.82 |
| ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 42,69,534.98 |
| இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 10,67,383.75 |
| ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | ரூ. 1,28,086.05 |
| உ) மின்சாரம் | ரூ. 30,000.00 |
| ஊ) எதிர்பாரா செலவு | ரூ. 10,62,691.90 |
| எ) தர நிர்ணயம் 1% | ரூ. 4,26,953.50 |
| ஒரு சதுர அடிக்கு ஆகும் செலவு<br>அ) ஒரு மீட்டருக்கு செலவு | **பிளாக்–A**<br>கடைக்கால் – ரூ.662.08 / சதுர அடி<br>தரைதளம் – ரூ.1065.07 / சதுர அடி<br>முதல் தளம் – ரூ.986.62 / சதுர அடி<br>**பிளாக்–B**<br>கடைக்கால் – ரூ.662.08 / சதுர அடி<br>தரைதளம் – ரூ.1065.07 / சதுர அடி<br>முதல் தளம் – ரூ.986.62 / சதுர அடி<br>**பணி மனை** – ரூ. 551.70 / சதுர அடி<br>**சுற்றுச்சுவர்** – ரூ. 3618.85 / மீ. |
| மதிப்பீட்டிற்கு பரிந்துரைத்த வார்டுகுழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள். | பெறப்படவுள்ளது |
| நிதியின் மூலத்தன்மை | கட்டடத்துறை – மூலதனநிதி |
| இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.4,96,80,000.00 |

மேற்கண்ட பணிக்கு முதற்கட்டமாக 2012-2013ஆம் ஆண்டின் விலை விவரப்படி ரூ.3,62,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டபோது

ஒற்றை ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ராஜேஷ் அன்டு கோ அவர்கள் பங்கேற்று (+)16.20% குறிப்பிட்டிருந்தார். ஒற்றை ஒப்பந்ததாரரான திருவாளர்கள் ராஜேஷ் அன்டு கோ அவர்களுடன் 08.10.2012 அன்று நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் தன் ஒப்ப சதவிகிதத்தை குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. ஒற்றை ஒப்பந்ததாரர் தன் ஒப்ப சதவிகிதத்தை குறைக்க சம்மதம் தெரிவிக்காததாலும் ஒப்ப சதவீதம் அதிகமாக உள்ள காரணத்தாலும் ஒற்றை ஒப்பந்ததாரரின் ஒப்பத்தை ரத்து செய்து மறு ஒப்பம் கோர 30.10.2012 அன்று மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) அவர்களின் ஆணை பெறப்பட்டது.

அதன் பின்னர் **16.11.2012, 07.12.2012** மற்றும் **23.01.2012** ஆகிய தேதிகளில் மறு ஒப்பங்கள் கோரியும் ஒப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

இந்நிலையில் புதிய அலுவலக விலைப்பட்டியல் **2013–14**ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்டதால் மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலைப் பட்டியல்களின் அடிப்படையில் இப்பணிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

**2012–2013**ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட ரூ.3,62,00,000/–க்கான மதிப்பீட்டிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதிக்கு, தற்போது 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.4,96,80,000/–க்கு (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு தலைமைப் பொறியாளர் (க.(ம)பா.) அவர்களின் திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே ஏற்கனவே கோரப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதால், புதிதாக **2013–2014**ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.4,96,80,000/–க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் ஒப்புதலும், மறு ஒப்பம் கோரவும் தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**18.11.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.**561/2013**, நாள் **18.11.2013**–ன்படி வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''**19.11.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 581/2013, நாள் **19.11.2013**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி2/3245/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 05.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.746/2013 பொருள் எண்:14

**திருத்திய மதிப்பீடு**

வார்டு எண் : 20 மண்டலம் : 2

| | |
|---|---|
| பணியின் பெயர் | கட்டடத்துறை – மண்டலம்–2, வார்டு–20, மணலி, காமராஜர் சாலையில் வாகன இயக்கூர்தி நிலையம் (மண்டலம்–3க்காக) கட்டும் பணி |
| பரிந்துரை செய்தவரின் விவரம் | வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012-13ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண்.59 |
| எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | இயந்திரப்பொறியியல் துறை |
| மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது |
| மதிப்பீட்டுத் தொகை | ரூ. 5,32,80,000.00 |
| அ) கட்டுமான பணி செலவினம் | ரூ. 4,57,90,327.12 |
| ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 45,79,032.71 |
| இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 11,44,758.18 |
| ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | ரூ. 1,37,370.98 |
| உ) மின்சாரம் | ரூ. 30,000.00 |
| ஊ) எதிர்பாரா செலவு | ரூ. 11,40,607.74 |
| எ) தர நிர்ணயம் 1% | ரூ. 4,57,903.27 |
| ஒரு சதுர அடிக்கு ஆகும் செலவு<br>அ) ஒரு மீட்டருக்கு செலவு | **பிளாக்–A**<br>கடைக்கால் – ரூ.720/- / சதுர அடி<br>தரைதளம் – ரூ.1110/- / சதுர அடி<br>முதல் தளம் – ரூ.1086/- / சதுர அடி<br>**பிளாக்–B & C**<br>கடைக்கால் – ரூ.695/- / சதுர அடி<br>தரைதளம் – ரூ.1234/- / சதுர அடி<br>முதல் தளம் – ரூ.1104/- / சதுர அடி<br>**பணி மனை** – ரூ. 775/- / சதுர அடி<br>**சுற்றுச்சுவர்** – ரூ. 5189/- / அடி |
| மதிப்பீட்டிற்கு பரிந்துரைத்த வார்டுகுழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள். | பெறப்படவுள்ளது |
| நிதியின் மூலத்தன்மை | கட்டடத்துறை – மூலதனநிதி |
| இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ 5,32,80,000.00 |

மேற்கண்ட பணிக்கு முதற்கட்டமாக 2012-2013ஆம் ஆண்டின் விலை விவரப்படி ரூ.3,83,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டபோது

ஒற்றை ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ராஜேஷ் அன்டு கோ அவர்கள் பங்கேற்று (+)30.47% குறிப்பிட்டிருந்தார். ஒற்றை ஒப்பந்ததாரரான திருவாளர்கள் ராஜேஷ் அன்டு கோ அவர்களுடன் 10.10.2012 அன்று நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் தன் ஒப்ப சதவிகிதத்தை (+)26.88% ஆக குறைத்திருந்தார். அதற்கு மேல் ஒற்றை ஒப்பந்ததாரர் ஒப்ப சதவிகிதத்தை குறைக்க சம்மதம் தெரிவிக்காததாலும் ஒப்ப சதவீதம் அதிகமாக உள்ள காரணத்தாலும் ஒற்றை ஒப்பந்ததாரரின் ஒப்பத்தை ரத்து செய்து மறு ஒப்பம் கோர 30.10.2012 அன்று மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) அவர்களின் ஆணை பெறப்பட்டது.

அதன் பின்னர் **16.11.2012, 07.12.2012** மற்றும் **23.01.2012** ஆகிய தேதிகளில் மறு ஒப்பங்கள் கோரியும் ஒப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலைப் பட்டியல்களின் அடிப்படையில் இப்பணிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்க மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) அவர்களின் ஆணை பெறப்பட்டு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, **2012–2013**ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட ரூ.3,83,00,000/–க்கான மதிப்பீட்டினை ரத்து செய்யவும், தற்போது 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.5,32,80,000/–க்கு (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்திரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும், மறு ஒப்பம் கோரவும் தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**18.11.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.**562/2013**, நாள் **18.11.2013**–ன்படி வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**19.11.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். **582/2013**, நாள் **19.11.2013**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி5/3885/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 12.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.747/2013 **பொருள் எண்:15**

**மதிப்பீடு**

வார்டு எண் : 58 மண்டலம் : 5

| | |
|---|---|
| பணியின் பெயர் | கட்டடத்துறை – மண்டலம்–5, வார்டு–58, அல்லிகுளத்தில் உள்ள வணிக வளாகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தளத்தில் எழும்பூரில் ஏற்கனவே உள்ள சென்னை பெருநகர நீதிமன்றத்திற்கு (CMM Courts) நீதிமன்ற கூடங்கள், அறைகள் மற்றும் அலுவலகங்கள் அமைக்கும் பணி |
| பரிந்துரை செய்தவரின் விவரம் | முதன்மைச் செயலர் / ஆணையர் |
| எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்–5 |
| மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டது |
| மதிப்பீட்டுத் தொகை | ரூ. 3,26,50,000.00 |
| அ) கட்டுமான பணி செலவினம் | ரூ. 2,80,48,301.50 |
| ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 28,04,830.15 |
| இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 7,01,207.54 |
| ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | ரூ. 7,01,032.89 |
| உ) தர நிர்ணயம் 1% | ரூ. 2,80,483.02 |
| ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 0.3% | ரூ. 84,144.90 |
| எ) மின்சாரம் / மற்ற பிற இனங்கள் | ரூ. 30,000.00 |
| 8 | *Rule 14 Rate of tax for advertisement other than on hoarding .--(1) The council shall fix the half yearly advertisement tax on advertisements exhibited other than on hoardings within the minimum of Rs.50 and maximum of RS.500 per square metre.*<br><br>*(2) While fixing the rate of advertisement tax, the Council shall take into consideration the location and type of the advertisement and may fix different rates of tax for different places and different types of advertisements.* | in rule 14, after sub-rule (2), the following sub-rule shall be inserted as rule 14 (3),<br><br>"the rate of tax specified under rule 14(1), shall be revised by the council once in every three years and such revision of tax shall be increased not less than twenty-five per cent and not more than thirty-five per cent of the tax levied immediately before the date of revision. |
| 9 | *15. Issue of assessment order on advertisement tax .-- The District Collector shall issue an assessment order for payment of half yearly advertisement tax in Form IV along with the licence for erection of a hoarding.* | in rule 15, for the expression "District Collector", the expression "Commissioner" shall be substituted. |
| 10 | *16. Payment of advertisement tax .-- The advertisement tax shall be levied and collected every half year beginning from 1st April to 30th September and from 1st October to 31st March. The advertisement tax shall be paid within thirty days from the beginning of the half year or within thirty days from the date of issue of assessment order, as the case* | in rule 16, for the expression "District Collector", the expression "Commissioner" shall be substituted. |

| Sl. No. | Present Rule and Definition | Proposed Draft Amendment |
|---|---|---|
| | *may be. If the advertisement tax is not paid within the said period of thirty days, the District Collector may after giving notice in writing to the owner of such hoarding take such action as are required under these rules.* | |
| 11 | *17. Maintenance of registers. .-- A register as in Form VI shall be maintained by the District Collector in respect of Chennai Corporation in regard to issue of licences for erection of hoarding and collection of rent and advertisement tax on hoarding.* | in rule 17, for the expression "District Collector", the expression "Commissioner" shall be substituted. |
| 12 | *18. Inspection of hoardings .-- The District Collector or any officer authorized by him in this behalf shall make periodical inspection of the hoardings erected and verify whether hoardings are being maintained in accordance with the conditions prescribed in the licence. During such inspection, if it is noticed that the hoardings are not in accordance with provisions of the Act and these rules and the conditions of licence, the District Collector shall take such action as are required under these rules.* | in rule 18, for the expression "District Collector", in two places where it occurs, the expression "Commissioner" shall be substituted. |
| 13 | *19. Remittance of Chennai Corporation's share of advertisement tax on hoarding.-- The District Collector shall arrange to remit the twenty five percent of the advertisement tax collected on the advertisement made on the hoarding permitted in the area of Chennai Corporation to the Personal Deposit account of the Chennai Corporation in the Reserve Bank of India, Chennai, once in a year between April and June of the succeeding year.* | The rule 19 may be omitted. |
| 14 | *Appendix to the G.O.*<br>*FORM - II*<br>*Sl.No.(4) The licensee should on no account change the ownership of the hoarding without prior permission of the District Collector.* | In Form II, for the expression "District Collector", the expression "Commissioner" shall be substituted. |
| 15 | *Appendix to the G.O.*<br>*FORM - III* | In Form III, for the expression "District Collector", in three places where it occurs, the expression "Commissioner" shall be |

| Sl. No. | Present Rule and Definition | Proposed Draft Amendment |
|---|---|---|
| | | substituted. |
| 16 | *Appendix to the G.O.*<br>*FORM - IV* | In Form IV, for the expression "District Collector", in two places where it occurs, the expression "Commissioner" shall be substituted.<br><br>For the expression "Reserve Bank of India, Chennai", the expression "Corporation of Chennai" shall be substituted. |
| 17 | *Appendix to the G.O.*<br>*FORM – VI* | In form VI, for the expression "District Collector", the expression "Commissioner" shall be substituted. |

CORPORATION OF CHENNAI,
REVENUE DEPARTMENT.

R.D.C.No.M4/1702/2013, dated 08.2013.

**Proposed amendments to the Tamil Nadu Urban Local Bodies (Permission for Erection of Digital Banners and Placards) Rules, 2011.**

| Sl.No. | Existing rules | Proposed rules |
|---|---|---|
| 1 | 3. Application for Permission. – (1) Every application for permission to erect digital banners or placards shall be made to the District Collector, fifteen days prior to the date of their proposed erection, in Form I. | in rule 3, in sub-rule (1), for the expression "the District Collector", the expression "the Commissioner, Corporation of Chennai, in the Chennai Corporation area and to the District Collector in the districts" , shall be substituted. |
| 2 | Sub rule (5) The District Collector shall, on receipt of the application, scrutinise the same, and if it fulfills the requirements of the Act and these Rules, grant permission in Form II for erection of digital banner or placard. Permission under these rules shall be given for a period of not exceeding six days including the date of erection and removal. | in sub- rule 5, for the expression "The District Collector", the expression "The District Collector and the Commissioner, Corporation of Chennai as the case may be", shall be substituted. |
| 3 | Sub rule (6) The District Collector may refuse to grant permission in Form-III, if the application is submitted belatedly or without necessary details and certificates, or without necessary permission fee or deposit or in violation of any of the provisions of the Act or these Rules. | in sub rule 6, for the expression "The District Collector", the expression "The District Collector and the Commissioner, Corporation of Chennai as the case may be", shall be substituted. |
| 4 | Sub rule (7) The Permission holder shall display the following details in the bottom of the digital banners | in sub rule 7, for the expression "District Collector's ", the expression |

| Sl.No. | Existing rules | Proposed rules |
|---|---|---|
| | or placards, in a font size of not less than 1 inch height, namely, District Collector's permission Number, period of validity, and total number of digital banners and placards for which permission has been given. | "District Collector's and the Commissioner's, Corporation of Chennai as the case may be", shall be substituted. |
| 5 | Rule 4. Payment of Permission fee and Deposit .-<br><br>(2) The permission fee shall be paid in the treasury of the urban local body concerned.<br><br>(3) In addition, a refundable deposit of Rs.50/- (Rupees fifty only) per digital banner or placard shall be remitted by the applicant along with the permission fee, irrespective of the fact whether the digital banner or placard is proposed to be erected in a private or public place. The deposit amount shall also be remitted by the applicant in the treasury of the respective urban local body. The entire deposit amount paid shall be forfeited, if any damage is caused to the road or public property, while erecting or removing the digital banners or placards or if the permission holder makes false declaration or violates any of the conditions of permission or the provisions of the Act or these Rules. In addition, additional compensation amount towards the damages caused to the roads or public properties shall also be recovered from the applicant, if the damage caused to the road or public property exceeds the deposit amount. The applicant shall furnish an undertaking in this | in rule 4,<br><br>in sub-rule (2), for the expression "the treasury of the urban local body concerned ", the expression "the treasury of the urban local body concerned or any mode of payment prescribed by the urban local body" shall be substituted,<br><br>in sub-rule (3), for the expression "the District Collector", the expression "the District Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted, |

| Sl.No. | Existing rules | Proposed rules |
| --- | --- | --- |
| | regard. In other cases, the deposit amount shall be refunded by the urban local body concerned, based on the orders of the District Collector, if no violations of the conditions are reported. | |
| 6 | Rule 7. Unauthorised, obscene or objectionable digital banners or placards. – (1) The District Collector may confiscate or summarily remove any digital banners or placards erected without permission, and recover the cost of removal from the person who has erected them.(2) The District Collector may, either suo motu or on any representation, direct the permission holder of digital banners or placards to remove them immediately, if their contents are considered to be obscene or objectionable, failing which the District Collector shall summarily remove them through his authorised representative, and recover the cost from the applicant. | in rule 7, for the expression "District Collector", in three places where it occurs, the expression "the District Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted. |
| 7 | Rule 8. Inspection of digital banners or placards.– The District Collector or any officer authorised by him in this behalf shall make inspection of the digital banners or placards erected and verify whether they are erected in accordance with the conditions specified in the permission order, the provisions of the Act and these Rules. | in rule 8, for the expression "District Collector", the expression "the District Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted. |
| 8 | Rule 9. Cancellation of permission for digital banners or placards. – Where the District Collector, either suo motu or on representation, has | in rule 9, for the expression "District Collector", in three places where it occurs, the expression "the District |

| Sl.No. | Existing rules | Proposed rules |
|---|---|---|
| | reason to believe that, a person who has got permission for the erection of digital banners or placards has violated or failed to comply with the conditions of the permission or any of the provisions of the Act or these Rules, he may summarily cancel the permission, and order the removal of digital banners or placards. In all such cases, the entire deposit amount paid by the permission holder shall be forfeited. | Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted. |
| 9 | Rule 12. Appeal against the order refusing to give permission or cancellation of permission for the erection of digital banners or placards.- An appeal against the refusal of permission or cancellation of permission by the Collector, for erection of digital banners or placards, shall be made to the State Government in Form IV within thirty days from the date of receipt of the order of such refusal or cancellation. An appeal shall be accompanied by a fee of Rs.500/- (Rupees five hundred only) and the grounds of appeal. Such appeal shall be disposed of within a period of thirty days from the date of its receipt. The orders of the Government on such appeal shall be final. | in rule 12,<br><br>for the expression "the Collector", in the expression "the Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted. |
| 10 | Rule 13. Maintenance of register. – A register in Form V shall be maintained by the District Collector with regard to grant or rejection of permission for erection of digital banners or placards. | In rule 13, for the expression "the District Collector", in the expression "the District Collector or the Commissioner, Corporation of Chennai as the case may |

| Sl.No. | Existing rules | Proposed rules |
|---|---|---|
| | | be" shall be substituted. |
| 11 | Form I<br><br>Undertaking<br><br>To<br><br>The District Collector,<br><br>----------------- District,<br><br>------------------------- .<br><br>Signature of the Collector<br><br>or authorized signatory and date. | In Form I,<br><br>in the undertaking by the applicant, for the expression "the District Collector", in the expression "the District Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted.<br><br>In Form I, Annexure to Form I, for the expression "the Collector", in the expression "the Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted. |
| 12 | Form II<br><br>Signature of District Collector<br><br>[The duplicate copy of the Annexure to Application in Form –I submitted by the applicant, shall be countersigned by the District Collector and enclosed to this permission order] | In Form II, for the expression "District Collector", in two places where it occurs, the expression "the District Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted. |
| 13 | FORM III<br><br>[See rule 3(6) of the Tamil Nadu Urban Local Bodies (Permission for<br><br>Erection of Digital Banners and Placards) Rules, 2011.]<br><br>ORDERS OF DISTRICT COLLECTOR | In Form III,<br><br>for the expression "District Collector", in two places where it occurs, the expression "the District Collector or the Commissioner, Corporation |

| Sl.No. | Existing rules | Proposed rules |
|---|---|---|
| | REFUSING TO GRANT PERMISSION FOR THE<br><br>ERECTION OF DIGITAL BANNERS OR PLACARDS.<br><br>The applicant is hereby informed that an appeal against this order can be made to the State Government within 30 days from the date of receipt of this order.<br><br>Signature of the District Collector ……………<br><br>Signature of the District Collector ……………<br><br>and date. | of Chennai as the case may be" shall be substituted. |
| 14 | FORM IV.<br><br>[See rule 12 of the Tamil Nadu Urban Local Bodies (Permission for Erection of Digital Banners and Placards) Rules, 2011.]<br><br>APPEAL AGAINST THE ORDERS OF THE DISTRICT COLLECTOR REFUSING TO GIVE PERMISSION OR CANCELLATION OF PERMISSION FOR THE ERECTION OF DIGITAL BANNERS OR PLACARDS. | In Form IV,<br><br>for the expression "District Collector", in three places where it occurs, the expression "the District Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted. |
| 15 | Form V<br><br>District Collector……………….. | In Form V, for the expression "District Collector", the expression "the District Collector or the Commissioner, Corporation of Chennai as the case may be" shall be substituted. |

**பொ.து.ந.க.எண்.ஈ1/26277/2013**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 30.10.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.757/2013 பொருள் எண்.25

**ஓய்வு பெற்ற கண்காணிப்பு பொறியாளரை கலந்தரிதற்குரியராக நியமனம் செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி**

05.06.2013 நாளிட்ட தலைமை பொறியாளர் (கட்டடம் (ம) பாலங்கள்)(பொ) அவர்களின் குறிப்பில், சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக, தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை (TNUIFSL), திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் மூலமாக செய்து முடிக்கவும், இந்தப் பணிகளை செய்ய திட்ட மேம்பாட்டாளர்களை தெரிந்துக் கொள்வதற்கும், சென்னை மாநகராட்சிக்கு ஆலோசனை வழங்கி வருகிறது என்றும்,

சென்னை மாநகராட்சியின் எல்லை 174 ச.கி.மீ.லிருந்து 424 ச.கி.மீ.யாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால், சென்னை நகரத்தின் மேம்பாட்டு பணிகள் அதிகரித்துள்ளதாலும், விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சி எல்லைகளில், குப்பைகள் அதிகமாக பெருகுவதால், இக்குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தி, குப்பை கொட்டும் வளாகங்களில், சேகரித்து அவைகளை மறுசுழற்சி முறைக்கு பயன்படுத்தப்படுகிறது என்றும், அதிக அளவில் மக்கள் தொகை இருக்கும் இடங்களில், சேவை செய்வதற்கு திடக்கழிவு மேலாண்மை துறையின் பொறுப்பு அதிகம் தேவைப்படுகிறது என்றும்,

மேலும், திடக்கழிவு மேலாண்மை துறை, நகராட்சி திடக்கழிவு விதிகள் (மேலாண்மை மற்றும் செயல்பாடு) (Municipal Solid Waste Rules (Management and Handling)), சுற்றுசூழல் தீர்வுக்கான சுற்றுசூழல் செயல் மதிப்பீடு அறிவிக்கை என தனி சட்டப்படியான கட்டமைப்பின் கீழ் பணியாற்றும் துறை ( Environmental Impact Assessment Notification for getting Environment Clearance) என்றும்,

தற்போது மக்கள் தொகை அதிகரித்துள்ளதால், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்கள் நிரம்பியுள்ளதாலும், அங்கு குடியிருப்புகளிலுள்ள பொதுமக்கள் குப்பைகளை சேகரிப்பதற்கு மறுப்பு தெரிவிப்பதாலும், அதனை சேகரிக்க வேறு இடம் தேடவேண்டிய அவசியம் சென்னை மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், தற்போது இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு துப்புரவு பணி மேற்கொள்வதற்கு போதிய மனிதவளம் இல்லை. எனவே, திடக்கழிவு மேலாண்மைத்துறையில் (1) கழிவு செயல்முறை வசதிகள் உருவாக்குதல் (creation of waste processing facilities) (2) கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியிலுள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் தீர்வுவழி செய்தல் (remediation of existing landfill sites at Kodungaiyur and Perungudi) மற்றும் (3) சென்னை மாநகராட்சி மண்டலங்களின் துப்புரவு பணிகளை தனியார்மயமாக்க, சில மண்டலங்களை குறித்து காண்பிக்கப்பட்டுள்ள (privatization of conservancy in the Chennai Corporation zones identified by the Chennai Corporation), மூன்று திட்டங்கள் அமைக்கப்பட்டது என்றும், கழிவு செயல்முறை வசதிகள் உருவாக்குதல் திட்டம் தற்போது தொழில்நுட்ப செயற்குறிப்பு மதிப்பீடு அளவில் உள்ளது. மற்ற 2 திட்டங்கள் ஒப்பந்த படிவங்கள் பெறப்பட்டு, முழுமைப்பெற்ற நிலையில் உள்ளது என்றும்,

மேற்படி செயல்பாட்டினை, முழு ஆக்கத்துடன் நடைமுறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை குறித்தான நடைமுறை வழக்க திறன் பெற்ற துறைத்தலைவரான கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை ) பதவிக்கே உள்ளது என்றும்,

திரு.சி.சார்லஸ், அவர்கள் கண்காணிப்பு பொறியாளராக நவம்பர் 2012 முதல் திடக்கழிவு மேலாண்மைத்துறை சம்மந்தப்பட்ட பணிகளையும், கூடுதலாக பொறுப்பேற்று நடத்தி வந்துள்ளார். இவர் 30 வருட பணி முடித்துள்ளார். இவர் மண்டல அலுவலர்–7 மற்றும் மண்டல அலுவலர்–3 ஆக நீண்ட நாட்களாக பொறுப்பு வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) ஆக பணியாற்றிய காலத்தில், தனியார் நிறுவனங்களிடம் ஒப்பந்த வடிவத்தில் துப்புரவு பணிகளுக்கு மனிதவளம் குறைவாக உள்ள நிலையை நீக்கியும், மேலும், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியிலுள்ள குப்பை கொட்டும் வளாகத்திற்கு எளிதாக குப்பை லாரிகள் செல்லுவதற்கு சாலை அமைக்கும் திட்டங்கள் மற்றும் தேவையற்ற பிளாஸ்டிக் பொருட்களை பிட்டுமனுடன் கலந்து சாலை அமைக்கும் பணி போன்ற பலதரப்பட்ட பணிகளை மிக பற்றுடன் செய்து வந்தார் என்றும்,

எனவே, கண்காணிப்பாளர் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) பதவிக்கு புதிதாக எவரேனும் நியமிக்கப்படின், மேற்கூறிய திட்டங்கள் மற்றும் பணிகளை புரிந்துக்கொண்டு இயங்குவதற்கு கடினமாக தோன்ற வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்து, திரு.சி.சார்லஸ், கண்காணிப்பு

பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அவர்களை மீண்டும், கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) ஆக பணிநீட்டிப்பு செய்ய ஆணை பெற்றிட கோரியுள்ளார். தலைமை பொறியாளர் (கட்டடம் (ம) பாலங்கள்) (பொ.) அவர்களின் கோரிக்கையை துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

மேற்கூறிய விவரங்களின் அடிப்படைலும், நிர்வாக நலன் கருதியும், திடக்கழிவு மேலாண்மை துறையின் திட்டமைப்பு பணிகளுக்கு, திரு.சி.சார்லஸ், கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அவர்களின் பணி மிகவும் அவசியம் என்பதால், திரு.சி.சார்லஸ், கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அவர்களை, கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) பதவிக்கு ஓராண்டுகாலம் பணிகாலத்தை நீட்டிக்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு அரசுக்கு முன்மொழிவுகள் **24.06.2013** நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் திரு.சி.சார்லஸ், கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் **30.06.2013** அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார்.

**04.07.2013** நாளிட்ட அரசு கடிதம் எண்.**15114**/மா,ந,**3/2013–1**, நாள்:**04.07.2013**ல், **30.06.2013** அன்று ஓய்வு பெற்ற திரு.சி.சார்லஸ், கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அவர்களை ஓய்வூதியம் கழிக்கப்பட்ட ஊதியம் (Pay minus Pension) அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் ஆலோசகராக மறுபணி நியமனம் செய்ய சென்னை மாநகராட்சியின் பிரேரணையினை மறுபரிசீலணை செய்யவும், திருத்தப்பட்ட பிரேரணையினை, அரசுக்கு அனுப்ப கூடுமானால், அனுப்பிவைக்கும்படி அறிவுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து, **30.06.2013** அன்று ஓய்வு பெற்ற திரு.சி.சார்லஸ், கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அவர்களின் ஒப்புதல் வேண்டி **06.09.2013** நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பப்பட்டது. தனியர் அதனை பெற்றுக்கொண்டு, தனக்கு ஓய்வூதியம் கழிக்கப்பட்ட ஊதியம் (Pay minus Pension) அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் ஆலோசகராக மறுபணி நியமன பதவி ஏற்க **19.09.2013** நாளிட்ட கடிதம் மூலம் சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற கண்காணிப்பு பொறியாளர் திரு.சி.சார்லஸ் அவர்களை, சென்னை மாநகராட்சியில், திடக்கழிவு மேலாண்மைத் துறையின் பணிக்காக, ஆலோசகராக மறுபணி நியமனம் செய்யும்பட்சத்தில், அவருக்கு வழங்கப்படவேண்டிய மறுபணி ஓய்வூதியம் (Re-employment Pension) கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

| கண்காணிப்பு பொறியாளர் பதவியின் ஊதிய விகிதம் | | ரூ.37,400-67000+8700 நிலை ஊதியம் |
|---|---|---|
| I | (அ) இறுதியாக வழங்கப்பட்ட ஊதியம் | ரூ.38,790 + 8700 நிலை ஊதியம் |
| | (ஆ) அ.வி.படி @ 90% + வீ.வா.படி + ந.ஈ.படி+ ம.படி | ரூ.42741+ 3200 + 600 + 100 |
| | மொத்த ஊதியம் | ரூ.94131 |
| | ஆண்டு ஊதியம் | ரூ.1129572 |
| II | அடிப்படை ஓய்வூதியம் | ரூ.23745 |
| | அ.வி.படி @ 90% + ம.படி | ரூ.21371+ 100 |
| | மொத்த ஊதியம் | ரூ.45216/- |
| III | ஓய்வூதியம் கழிக்கப்பட்ட ஊதியம் | ரூ.94131– 45216= **ரூ.48915/-** |
| | ஆண்டு ஊதியம் | ரூ. 586980 |

திரு.சி.சார்லஸ், கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அவர்களை, சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துறையின் ஆலோசகராக Pay minus Pension அடிப்படையில் மறுபணி நியமனம் செய்யும்பட்சத்தில் ஏற்படும் செலவினம், சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து செலவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், **30.06.2013** அன்று ஓய்வு பெற்ற திரு.சி.சார்லஸ், கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அவர்களை ஓய்வூதியம் கழிக்கப்பட்ட ஊதியம் (Pay minus Pension) அடிப்படையில், சென்னை மாநகராட்சியில் ஆலோசகராக மறுபணி நியமனம் செய்வதற்கு உரிய அரசாணை பெறும் பொருட்டு, அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்புவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

<u>பொ.து.ந.க.எண்.ஈ1/19852/2012</u>

<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 1911.2013 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.758/2013 பொருள் எண்.26

<u>கருத்தியலாக செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி</u>

சென்னை மாநகராட்சி 2012–2013ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் தெரிவுப்பட்டியல் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் போது திரு.ப்பி.அண்ணாதுரை, உதவி செயற் பொறியாளர் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால் 2012–2013ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் அன்னாரின் பெயரை சேர்க்காமல் ஒத்தி வைக்கப்பட்டது.

27.12.2012 நாளிட்ட மன்றத் தீர்மானத்தின்படி மற்றும் 09.01.2013, 01.02.2013, 28.02.2013, 08.03.2013 மற்றும் 20.03.2013 நாட்களிட்ட செயல்முறை ஆணைகளின்படி தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ள 36 பொறியாளர்களுக்கு செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

08.11.2011 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை மூலமாக திரு ப்பி.அண்ணாதுரை, உதவி செயற் பொறியாளர் அவர்கள் மீது ஏற்படுத்தப்பட்டு, நிலுவையிலிருந்த குற்றச்சாட்டிலிருந்து தனியரை விடுவிக்கப்பட்டு 02.08.2013 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.ப்பி.அண்ணாதுரை, உதவி செயற் பொறியாளர், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் மீது மேல்நடவடிக்கை கைவிடப்பட்டதால், 2012–2013ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் **வரிசை எண்.34ல் உள்ள திரு.ஆர்.மனோகரன் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.35ல் உள்ள திரு.ஜி.அருள்விஜய் அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.34Aல்** மூப்புநிலை நிர்ணயம் செய்து திரு.ப்பி.அண்ணாதுரை, உதவி செயற் பொறியாளர் அவர்களின் உடனடி இளையவர் (Immediate Junior) திரு. ஜி.அருள்விஜய் அவர்கள், செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று, செயற்பொறியாளராக பணியேற்ற நாள் முதல், முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.93ல் தெரிவித்துள்ளவாறு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு **ரூ.15600–39100 + 6600 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் செயற் பொறியாளராக** தனியருக்கு கருத்தியிலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கி, தனியர் செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பயன்கள் வழங்கவும் 01.10.2013 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு 11.10.2013ல் செயற்பொறியாளராக தனியர் பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே, தனியருக்கு செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கியமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.டி1/131031–011/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.759/2013 பொருள் எண்:27

**கல்வித்துறை – சமுதாயக் கல்லூரி மற்றும்தொழிற் பயிற்சி நிலைய தற்காலிக அலுவலக பணியாளர்கள் – இளநிலை உதவியாளர் –1, தட்டச்சர் –1 ஆகியோர் பிப்ரவரி 1999 முதலும் மற்றும் அலுவலக உதவியாளர் – 1 ஆகஸ்டு 1999 முதலும் தற்காலிக தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிகிறார்கள் – 2013 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பணிக்காலம் முடிவடைதல் – பணியின் அவசியம் கருதி 01.11.2013 முதல் மேலும் ஓராண்டு பணி நீட்டிப்பும் மற்றும் தொகுப்பூதியத்தை உயர்த்தியும் மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.115, நாள்.22.02.1999ன்படி, கல்வித் துறையின் கீழ் 4 சமுதாயக் கல்லூரிகள் ( பிப்ரவரி 1999 முதல் 2 கல்லூரிகளும், மார்ச்சு 1999 முதல் 1 கல்லூரியும் ஆகஸ்டு 1999 முதல் நான்காவது கல்லூரியும்) மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இந்திய நாட்டில் சென்னை மாநகராட்சி , சமுதாயக் கல்லூரிகள் மற்றும் ஒரு தொழிற் பயிற்சி நிலையத்தை தொடங்கி நடத்தி வருவது இதுவே முதல் முறை ஆகும்.

மேற்காண்ட கல்லூரிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிலைய நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டி, இளநிலை உதவியாளர்–1, தட்டச்சர்–1 ஆகியோர் பிப்ரவரி 1999 முதலும் மற்றும் அலுவலக உதவியாளர்–1 ஆகஸ்டு 1999 முதலும் அப்போதைய துணை ஆணையர் (கல்வி) அவர்களால் நேரடியாகவும், தற்காலிகமாகவும் தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர்.

தனியர்களுக்கு இவர்களின் தகுதிகள், அனுபவம் மற்றும் தொழிற் பயிற்சி நிலையம் துவங்குவதற்கு உண்டான ஆயத்தப் பணிகளுக்கு இவர்களின் பணியை உட்படுத்தியதாலும் மற்றும் இன்று வரை நடைபெற்றுவரும் எக்ராட் பிரிவு அலுவலக பணிகளுக்கும் இவர்களுடைய பணி தேவைப்படுவதால், அரசாணை(நிலை) எண்.22 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 28.02.2006ன்படி, 01.01.2006 அன்றைய நிலையில் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளவர்களின் பணியினை பணிவரன்முறை செய்ய தெரிவிக்கப்பட்டதன்படி, தொழிற் பயிற்சி நிலையத்திற்கு அரசாணை எண். 292ல் தோற்றுவித்த அமைச்சு பணியிடமான இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களில் மேற்காணும் மூவரையும் பணி நியமனம் செய்ய சென்னை மாநகராட்சி நிர்வாகம் பரிசீலித்து நியமனக்குழுவின் பரிந்துரைகளின்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட மன்றத் தீர்மானத்தின்படி தனியர்களின் பதவிகளுக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை மாநகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணிவரன்முறை செய்ய அரசின் அனுமதி வேண்டி பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டது. மேலும் அரசுக்கு அவ்வப்பொழுது நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியர்களது பணிக்காலம் 31.10.2013 அன்று முடிவடையும் நிலையில் இருப்பதால், இவர்களது பணி தொடர்ந்து சமுதாயக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு தேவைப்படுகின்ற காரணத்தால், மேற்கண்ட மூன்று நபர்களின் பணிக்காலத்தினை 01.11.2013 முதல் 31.10.2014 வரை ஓராண்டு பணி நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் தனியர்களின் பணிநிரந்தரம் சம்மந்தமாக அரசு கடிதம் எண். 34236/மாந3/2010 நாள்: 24.05.2013 நாளிட்ட கடிதத்தில் ஆணை வழங்க சில கூடுதல் விவரங்கள் கேட்கப்பட்டது. அதற்கான பதில்களை கல்வித்துறை கடித எண்.க.து.ந.க.எண்.டி1/037/2007 நாள்.24.09.2013ன்படி, அனுப்பப்பட்டுள்ளது. பணிநிரந்தரம் தொடர்பான அரசாணை எதிர்நோக்கியுள்ளது.

தனியர்கள் ஏற்கனவே பெற்று வந்த தொகுப்பூதியத்தின் விவரங்கள் கீழ்வருமாறு,

| வ. எண் | மன்றத் தீர்மானங்கள் | தனியர்கள் பெற்று வந்த மாதத் தொகுப்பூதியம் | | |
|---|---|---|---|---|
| | | எம். மகாலெட்சுமி இ.நி.உ | ஆர். மகாலெட்சுமி இ.நி.உ | கே. சேகர் அலுவலக உதவியாளர் |
| 1. | மன்றத்தீர்மான எண்.363/2002, நாள்.30.09.2002 | ரூ.2500/– | ரூ.2500/– | ரூ.1000/– |
| 2. | மன்றத்தீர்மான எண்.85/2004, நாள்.21.05.2004 | ரூ.3000/– | ரூ.3000/– | ரூ.1500/– |
| 3. | மன்றத்தீர்மான எண்.34/2005,நாள்.20.01.2005 | ரூ.3000/– | ரூ.3000/– | ரூ.1500/– |
| 4. | மன்றத்தீர்மான எண்.57/2006, நாள்.02.02.2006 | ரூ.3500/– | ரூ.3500/– | ரூ.1800/– |
| 5. | மன்றத்தீர்மான எண்.136/2007, நாள்.25.04.2007 | ரூ.3500/– | ரூ.3500/– | ரூ.1800/– |
| 6. | மன்றத்தீர்மான எண்.620/2007, நாள்.28.11.2007 | ரூ.4000/– | ரூ.4000/– | ரூ.2100/– |
| 7. | மன்றத்தீர்மான எண்.643/2008, நாள்.30.12.2008 | ரூ.4250/– | ரூ.4250/– | ரூ.2250/– |
| 8. | மன்றத்தீர்மான எண்.126/2010, நாள்.26.02.2010 | ரூ.4250/– | ரூ.4250/– | ரூ.2250/– |
| 9. | மன்றத்தீர்மான எண்.51/2010, நாள்.30.12.2010 | ரூ.5000/– | ரூ.5000/– | ரூ.3000/– |
| 10. | மன்றத்தீர்மான எண்.105/2012, நாள்.18.04.2012 | ரூ.6000/– | ரூ.6000/– | ரூ.4000/– |
| 11. | மன்றத்தீர்மான எண்.113/2013, நாள்.22.02.2013 | ரூ.6000/– | ரூ.6000/– | ரூ.4000/– |

மேற்கண்ட தனியர்கள் இணை ஆணையர் (கல்வி) (பொ) அவர்களிடம் தங்களின் பணி நீட்டிப்பு மற்றும் தொகுப்பூதியத்தை உயர்த்தி தரும்படி கடிதம் சமர்ப்பித்துள்ளனர். மேலும் நிரந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படி மற்றும் ஆண்டு ஊதிய உயர்வு போன்றவை வழங்கப்படாத நிலையில் தனியர்கள் தற்காலிக தொகுப்பூதியத்தில் பணிபுரிவதாலும், இன்றைய விலை வாசி உயர்வால் குடும்பத்தை நடத்த போதுமானதாக இல்லை என்பதாலும், தற்போது பெற்றும் வரும் தொகுப்பூதியத்திலிருந்து உயர்த்தலாம். மேலும் தோராயமாக உயர்த்தப்படும் தொகுப்பூதியம் கீழ்வருமாறு,

| வ.எண் | பெயர்/பதவி/பணியின் விவரம் | தற்போது பெற்று வரும் தொகுப்பூதிய தொகை | உயர்த்தப்படும் தொகுப்பூதிய தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி. எம். மகாலெட்சுமி, இ.நி.உ சமுதாயக் கல்லூரி/தொழிற் பயிற்சி நிலையம்/கல்வித்துறை மதிப்பீட்டு பிரிவு பணிகள் | ரூ.6000/– | ரூ.7000/– |
| 2. | திருமதி. ஆர். மகாலெட்சுமி, தட்டச்சர் சமுதாயக் கல்லூரி/தொழிற் பயிற்சி நிலையம்/கல்வித்துறை பணியமைப்பு பிரிவு–2 பணிகள் | ரூ.6000/– | ரூ.7000/– |
| 3. | திரு. கே. சேகர், அ.உ சமுதாயக் கல்லூரி/தொழிற் பயிற்சி நிலையம்/கல்வித்துறை பணியமைப்பு பிரிவு–1 பணிகள் | ரூ.4000/– | ரூ.5000/– |

எனவே,

அ) சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிலைய தற்காலிக பணியாளர்களின் பணிக்காலம் 31.10.2013 அன்றுடன் முடிவடையும் நிலையில், தொடர்ந்து 01.11.2013 முதல் 31.10.2014 வரை ஓராண்டு பணி நீட்டிப்பு செய்யவும்,

ஆ) திருமதி. எம்.மகாலெட்சுமி, இ.நி.உக்கு தொகுப்பூதியம் ரூ.6000/– லிருந்து ரூ.7000/– உயர்த்தவும், திரு. ஆர். மகாலெட்சுமி, தட்டச்சருக்கு தொகுப்பூதியம் ரூ.6000/–லிருந்து ரூ.7000/– உயர்த்தவும், திரு.கே.சேகர், அலுவலக உதவியாளருக்கு ரூ.4000/–லிருந்து ரூ.5000/– ஆக 01.11.2013 முதல் உயர்த்தவும்,

இ) சென்னை மாநகராட்சி வருவாய் நிதி – துறை குறியீடு (இ) பிரிவு குறியீடு 80–82–03 கணக்கு குறியீடு 210–10–06–05–210 பணியாளர் செலவீனம் – நிரந்தரமற்றவர் ஊதியம் – மற்றவர் என்ற கணக்கு தலைப்பில் செலவினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட ''அ'', ''ஆ'', மற்றும் ''இ'' ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''13.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.43/2013, நாள்13.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.11.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 573/2013, நாள் 19.11.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**சு.ஜெ.ந.பு.வே.வா.தி.ந.க.எண்/341/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.760/2013 பொருள் எண்.28

**சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் பதிவு செய்துள்ள அண்டை வீட்டுக்குழுக்கள்/மகளிர் சுய உதவிக்குழுக்கள்– அம்மா உணவகங்களில் பணிபுரிய மன்றத்தின் அனுமதி**

பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம் (SWARNA JAYANTHI SHAHARI ROZGAR YOJANA - SJSRY) மத்திய அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வறுமை ஒழிப்பு துறையின் (Ministry of Housing and Urban Poverty Alleviation – MoHUPA) நிதி உதவியுடனும் மற்றும் மாநில அரசின்முழு பங்களிப்புடன் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம் துவங்கப்பட்டு செவ்வனே நன்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நகர்ப்புரங்களில் வாழும் ஏழை எளிய மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி படுத்திக் கொள்ள வழி வகை செய்வதே மேற்கண்ட திட்டத்தின் சிறப்பம்சமாகும். மேலும் மைய அரசு 75 சதவீதமும் மற்றும் மாநில அரசு 25 சதவீதமும் நிதியுதவியுடன் இத் திட்டம் சென்னை மாநகராட்சியில் கீழ்கண்டவாறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்குறிக்கோள்கள்

நகர்ப்புர வேலையற்றோர் மற்றும் தகுதிக்கேற்ற வேலையில்லாதோர் இவர்களுக்கு சுய சார்புடைய வருமானம் ஈட்டக்கூடிய வகையில் உதவி புரிவது, நகர்ப்புர ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு மற்றும் சுய தொழில் தொடங்கி வருமானம் ஈட்டும் வகையில் தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சிகளை வழங்குவது மூலமாக வேலை வாய்ப்பு எளிய முறையில் கிடைக்கச் வழிவகை செய்வது, நகர்ப்புர பகுதிகளுக்கு அருகில் உள்ள சுய உதவி குழுக்கள், சமுதாய சங்கங்கள் மற்றும் அமைப்புகளின் இணைப்பினை ஏற்படுத்தி நகர்ப்புற ஏழைகளுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பினை உறுதி செய்வது, தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புர மக்களுக்கு மற்றும் சமுதாய அமைப்புகளுக்கும் திட்டம் பற்றி எடுத்துக்கூறி இவர்கள் மூலமாக நகர்ப்புர ஏழைகளின் பிரச்சனைகளை ஆய்வு செய்வது மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது.

**திட்டத்தின் உட்கூறுகள் (Name of the Componnents)**

1. நகர்புர வேலைவாய்ப்பு திட்டம்
   (URBAN SELF EMPLOYMENT PROGRAMME –USEP)
2. நகர்புர பெண்கள் சுய சார்புநிதி திட்டம்
   (URBAN WOMEN SELF- HELP PROGRAMME- UWSP)
3. நகர்புர ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகள் மேம்படுத்தும் திறன் வளர்ப்பு பயிற்சிதிட்டம் (SKILL TRAINING FOR EMPLOYMENT PROMOTION AMONGST URBAN POOR - STEP- UP)
4. நகர்புர கூலி வேலைவாய்ப்புத்திட்டம்
   (URBAN WAGE EMPLOYMENT PROGRAMME – UWEP)
5. நகர்புர சமுதாய மேம்பாட்டு கூட்டமைப்பு
   (URBAN COMMUNITY DEVELOPMENT NETWORK –UCDN)

மேற்கண்ட இத் திட்டத்தினை சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை கண்டறிந்து அவர்களுக்கு திறன் வளர்க்கும் பயிற்சி, தனிநபர் கடனுதவி மூலம் சுய தொழில் செய்யவும், அண்டை வீட்டுக் குழுக்களுக்கு மானியத்துடன் கடன் உதவித்தொகை ஆகியவற்றை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக கடனுதவியும் மற்றும் மான்யத்துடன் கடன் வழங்கி நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்வதாரத்தை உயர்த்த இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கூடுதல் மாநகர நல அலுவலர் அவர்களின் 26.09.2013 நாளிட்ட கடிதப்படி, 200 கோட்டங்களிலும், அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது கூடுதலாக உணவு பரிமாற பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் என குறிப்பிட்டுள்ளது. அதனடிப்படையில் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள அண்டை வீட்டுக் குழுக்கள் – (Neighbourhood Groups-NHG) / மகளிர் சுய உதவி குழுக்களை – (Self Help Groups-SHG) கொண்டு உணவு பரிமாறும் பணிக்கு, பயன்படுத்திக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

1. அண்டை வீட்டுக்குழுக்கள்/ மகளிர் சுய உதவிக்குழுக்கள் – பதிவு செய்தல், அம்மா உணவகங்களில் பணிபுரிய– அனுமதி வேண்டுதல்
2. பணி புரிகின்ற பணியாளர்களுக்கு, ஊதியம் வழங்குதல்
3. ஊதியம் குழுக்களின் பெயரில் வழங்குவதற்கு
4. அம்மா உணவகத்தில் உள்ள தளவாடப் பொருட்கள், இதர அசையும், அசையா பொருட்கள் மற்றும் உணவு பொருட்கள் விற்பனை மூலம் பணவரவு ஆகிய அனைத்திற்கும், அங்கு பணிபுரியும் மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குநர், பிரதிநிதி, கோட்ட வரி வசூலிப்பாளர் மற்றும் கோட்ட சுகாதார ஆய்வாளர் அவர்களே பொறுப்பாவார்கள்.
5. அம்மா உணவகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்து, சுகாதார ஆய்வாளர் அவர்களால், வழிநடத்தி செயல்படுத்துதல்

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு அவசரம் மற்றும் அவசியத்தை கருதி மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.1.ந.க.எண்/டி1/01199/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.761/2013 பொருள் எண்.29

**தானப்பத்திரம்**

மண்டலம்.1ல் திருவாளர்கள் ஹன்ஸா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் சார்பாக திருவொற்றியூர் கிராமம் புல எண்கள் 317 முதல் 329 மற்றும் 330/A1A1 க்கு உட்பட்ட 17686 ச.மீ பரப்பில் 8 மனை உட்பிரிவு அனுமதி வேண்டியதன்படி 3372.56 ச.மீ சாலைக்கும், 1440.05 ச.மீ திறந்தவெளி நிலத்திற்கும் மாநகராட்சிக்கு தானமாக வழங்குவதற்கான நிகழ்வில் வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகத்தில் விளக்க குறிப்பு எழுப்பப்பட்டிருந்தது.

இதன் பேரில் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த உட்பிரிவு வரைபடத்தில் பொதுமக்கள், பயனாளிகளின் வசதியை கூடுதலாக மேம்படுத்தும் விதமாக சாலை அகலத்தை 7.20 மீட்டர் அகலத்திற்கு பதிலாக 9.00 மீட்டராக மாற்றியமைக்க மனுதாராரிடம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் வேண்டுகோள் விடுத்து, பொது நலன் கருதி அவ்வாறே மாற்றி அமைத்து மனுதாரர் புதிய வரைபடம் சமர்ப்பித்துள்ளார்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முயற்சியால் 3372.56 சதுர மீட்டரிலிருந்து 3838.00 சதுர மீட்டராக உயர்ந்துள்ள சாலை பரப்பால் சென்னை மாநகராட்சிக்கு 465.44 சதுர மீட்டர் சாலை பரப்பு கூடுதல் ஆதாயமாக கிடைக்கிறது.

மொத்தமுள்ள 17686 ச.மீ நிலப்பரப்பில் 3838 ச.மீ சாலை பரப்பு, 31.50 ச.மீ சாய்தளப் பரப்புடன் 12431.70 ச.மீ. லான 8 மனை உட்பிரிவுக்கு 10 சதவிகிதமான 1243.17 ச.மீ நிலம் திறந்தவெளி நிலமாக விடப்பட வேண்டும். இதை விட கூடுதலாக 1384.80 ச.மீ திறந்தவெளி நிலத்துடன் திருத்தப்பட்ட வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி திறந்தவெளி நிலப்பரப்பு 1440.05 ச.மீலிருந்து 1384.80 ச.மீ ஆக மாற்றம் பெறுகிறது.

ஏற்கனவே இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ள முந்தைய அளவுகளுக்கு மாற்றாக இந்த திருத்திய அளவுகளை ஏற்று இதனடிப்படையில் திருவாளர்கள். ஹன்ஸா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் சார்பாக திருவொற்றியூர் கிராமம் புல எண்கள் 317 முதல் 329 மற்றும் 330/A1A1 க்கு உட்பட்ட 17686 ச.மீ பரப்பில் 8 மனை உட்பிரிவுகள், மனை எண்1ல் 1403.48 ச.மீ, மனை எண்.2ல் 2542.81 ச.மீ, மனை எண்.3ல் 1877.14 ச.மீ, மனை எண்.4ல் 1827.46 ச.மீ, மனை எண்.5ல் 1368.45 ச.மீ, மனை எண்.6ல் 1449.75 ச.மீ, மனை எண்.7ல் 1235.70 ச.மீ மற்றும் மனை எண்.8ல் 726.91 ச.மீ ஆகிய அளவுகளில் மனைகளும் இம்மனைகளுக்கான சாலைப் பரப்பு 3838ச.மீ. இவற்றிற்கான திறந்தவெளி நிலப்பரப்பு 1384.80ச.மீ என்ற அளவுகளில் திருத்தியமைக்கப்பட்ட வரைபட அனுமதிக்காக, 3838 ச.மீ சாலை பரப்பும், 31.50 ச.மீ சாய்தளப் பரப்பு மற்றும் 1384.80 ச.மீ திறந்தவெளி நிலப்பரப்பும் மாநகராட்சி தானமாக பெறுவதற்கும் மற்றும் அபிவிருத்திக் கட்டணமான ரூ.25.35இலட்சத்தை மனுதாராரிடமிருந்து பெறுவதற்கும் நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் 11.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2013 அன்று தீர்மான எண். 23/2013–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.5.ந.க.எண்.இ4/6427/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.09.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.762/2013 பொருள் எண்.30

**தானப்பத்திரம்**

திரு.ஹேமந்த் குமார் மற்றும் திரு.கிருஷ்ணகுமார், வார்டு–58, பழைய எண்.86, புதிய எண்.16, ஈ.வி.கே. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை–7, T.S.No.907/3, பிளாக் எண்.17, புரசைவாக்கம் கிராமத்தில் குடியிருப்பு கட்ட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II" ன் மூலம் இச்சாலையை 9.00 மீட்டர் அகலத்திலிருந்து 18.00 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 4.50 மீட்டர் அகலத்திற்கும் 8.50 மீட்டர் நீளத்திற்கும் இடத்தினை தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இது சம்பந்தமாக கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 4.50 மீட்டர் அகலத்திற்கு, 8.50 மீட்டர் நீளத்திற்கு 38.25 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–5ல் பரிந்துரை செய்து (தீர்மான எண்.71) 13.06.2013 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே,

1. கட்டட உரிமையாளர் திரு.ஆர்.ஹேமந்த் குமார் மற்றும் திரு.கிருஷ்ணகுமார், அவர்களின் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 38.25 ச.மீ பரப்பளவு நிலத்தினை (T.S.No.907/3, பிளாக் எண்.17, புரசைவாக்கம் கிராமம்) சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.24,000/–ஐ கட்டட உரிமையாளரிடம் "ஆணையர், சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் காசோலையாக பெறவும்
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் 11.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 20.11.2013 அன்று தீர்மான எண். 24/2013–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/3822/2013</u>**

**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 20.11.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.763/2013 பொருள் எண்.31

**<u>நிலம் மற்றும் உடைமைத்துறை– மண்டலம் –6, வார்டு–74, சுப்பராயன் முதல் தெருவில் உள்ள மாநகராட்சி வணிக வளாகத்தினுள் காலியாக உள்ள கடையை பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கீழ் இயங்கும் நியாய விலை கடைகளுக்கு ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி</u>**

பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கீழ் அயன்புரம் பகுதியில் தனியார் கட்டிடத்தில் வாடகைக்கு இயங்கிவரும் ஏ.கே. சாமிநகர் (டி பி 029) நியாய விலைக்கடைக்கு மாற்று இடமாக மண்டலம் 6, வார்டு –74, பராக்கா மெயின்ரோடு எதிரில் உள்ள மாநகராட்சி காலி கட்டிடத்தை (அல்லது) ரெட்டி காலனியில் உள்ள மாநகராட்சி சிறுவர் மைதானத்தில் உள்ள 300 சதுர அடி கொண்ட காலி கட்டிடத்தை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

13.09.2013ஆம் நாளிட்ட 6–வது மண்டல வார்டுக்குழுத் தீர்மானம் எண்.100–இல் 74–வது வார்டில் பூங்க நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் ஏ.கே. சாமி நகர் நியாய விலை கடைக்கு மாற்று இடமாக வார்டு–74 ல் சுப்புராயன் முதல் தெருவில் உள்ள வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடையை ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்துள்ளது.

உதவி வருவாய் அலுவலர்/நி.ம.உ.து. அவர்களின்–18.10.13 நாளிட்ட அறிக்கையில் மேற்படி வணிக வளாக கடை எண்.7, (168 சதுர அடி பரப்பு கொண்ட கடை) (வார்டு–74, மண்டலம்–6) வெகு காலமாக காலியாக உள்ளதாகவும், பலமுறை ஒப்பந்தம் / ஏலத்தில் இக்கடையை ஏலம் விட்டும் எவரும் எடுக்கவில்லை என்றும், கடை எண்.7ஐ நியாய விலைகடைக்கு வணிகவளாக மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்யுமாறும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், மன்றத் தீர்மான எண்.413/2009, நாள்.29.10.2009–ல் பழைய மண்டலம்–4, வார்டு–59, புதிய மண்டலம்–6, வார்டு–74ல் உள்ள மேற்படி வணிக வளாக கடைகளுக்கு சதுர அடிக்கு ரூ.20/– என மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உதவி வருவாய் அலுவலர்/நிமஉது அவர்களின் அறிக்கையின்படி இம்மன்ற தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட தொகையினை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

ஆனால், மன்றத்தீர்மான எண்.312/13, நாள் 22.05.2013ல் பொதுமக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழக நியாய விலைகடைக்கு மாத வாடகை ரூ.5/– என்று நிர்ணயம் செய்யலாம் என்றும், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழக நியாய விலை கடைகள் ஒதுக்கீடு செய்யும் போது மாத வாடகை ரூ. 5/– என்றே நிர்ணயம் செய்யலாம் என்றும் மன்றம் தீர்மானித்துள்ளது. அதுபோல டி.யு.சி.எஸ். நிறுவன நியாய விலை கடைகளுக்கும் சதுரடிக்கு ரூ.5/– வாடகை என தீர்மான எண்.567/13, நாள்.29.08.2013ல் மன்றம் அனுமதி அளித்துள்ளது. அதன் அடிப்படையால் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நியாய விலை கடைக்கான மாத வாடகையையும் சதுர அடிக்கு ரூ.5/– என நிர்ணயம் செய்யலாம்.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் மண்டலம்–6, வார்டு–74 இல், வணிக வளாக (கணிப் பொறி) எண்.059, சுப்பராயன் முதல் தெரு, நம்மாள்வார் பேட்டையில் உள்ள 168 சதுர அடி பரப்புள்ள கடை எண்.7ஐ நியாய விலைகடைக்கு சதுரஅடிக்கு ரூ.5/–வீதம் மாத வாடகையும் 12 மாத வாடகை முன்பணமும் செலுத்த வேண்டும். கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்ய இருப்பின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.597/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்.பி3/4058/2013**

**முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்களின் 19.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.764/2013 பொருள் எண்:32

5. மின்னணு ஏலம் சென்னை மாநகராட்சி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா, இல்லை ஏனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். : ஆம்

6.மின்னணு ஏலம் நடத்தப்பட்ட நாள் : 08.11.2013

7.மின்னணு ஏலத்தில் பங்கேற்றவர்

| வ. எண். | மின்னணு ஏலத்தில் பங்கேற்க தகுதிபெற்ற ஏலதாரர்கள் | பயனற்ற கழிவின் குழுவின் மதிப்பு | மின்னணு ஏலத்தில் கேட்கப்பட்ட அதிகபட்ச விலை |
|---|---|---|---|
| 1 | 1 | ரூ. 42,67,100 / – | இல்லை |

பயனற்ற கழிவு விற்பனைக்காக (தொகுப்பு அடிப்படையில்) பழைய மண்டலம் – 1 முதல் மண்டலம் – 10 வரையில் பயனற்ற கழிவுகள் 150.36 டன் எடையில் இரும்பு பொருட்கள் 809.46கி.கி எடையில் அலுமினிய பொருட்கள், 616.35 கிகி எடையில் செம்பு பொருட்கள், 525.36 கி.கி எடையில் பித்தளை பொருட்கள் மேலும் 675.44 கி.கி எடையில் பிலாஸ்டிக் மற்றும் மரசாமான்கள்ஆகிய பயனற்ற கழிவுகளை மின்னணு ஏலம் மூலம் ரூ. 36,20,000 /– மதிப்பில் விற்பனை செய்ய ஆணையரின் 06.06.2012 நாளிட்ட நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பயனற்ற கழிவின் விற்பனைக்காக நடத்தப்பட்ட ஏலத்தில் (நாள்:02/07/2012) 115 ஏலதாரர்கள் பங்கேற்று அதில் அதிகபட்ச ஏலத்தொகையான ரூ.36,20,000/–க்கு பரிந்துரை செய்து குறிப்பு வைக்கப்பட்டது. ஆணையாளர் அவர்கள் ''ஏலத்தொகை குறைவாக உள்ளது, மறு ஒப்பம் கோருமாறு'' குறிப்பிட்டுள்ளார்கள். ஆகையால் மறு ஒப்பம் கோருவதற்கு பயனற்ற கழிவுகளின் மதிப்பு, தகுதி நிலை மற்றும் ஒப்ப ஆவணம் மறு மதிப்பீடு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. 22.10.2012 நாளிட்ட குறிப்பில் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு குழு அமைக்கப்பட்டது.

குழு உறுப்பினர்கள் விவரம்

(i) மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்)
(ii) மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)
(iii) நகர பொறியாளர்
(iv) நிதி ஆலோசகர்
(v) கோட்ட மின் பொறியாளர் (தலைமையிடம்)
(vi) கோட்ட மின் பொறியாளர் (தெற்கு)
(vii) கோட்ட மின் பொறியாளர் (மையம்)
(viii) கோட்ட மின் பொறியாளர் (வடக்கு)

மேற்பார்வை பொறியாளர் மின்சாரம் அலுவலகத்தில் 13/12/2012 அன்று குழு கூட்டப்பட்டு வேப்பேரி கிடங்கில் உள்ள பயனற்ற கழிவுகளை அகற்ற மறு ஒப்பம் கோருவதற்கு கீழ்க்கண்டவை கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

1) இணையதளம் மூலம் பயனற்ற கழிவுகளின் விலைகள் பெறப்பட்டு ஒப்பத்தொகை நிர்ணயம் செய்யவும்,
2) ஒப்பந்ததாரர்களின் தகுதி நிலை முன்பு ஒப்பத்தில் கோரப்பட்டவையே தொடரவும்,
3) முன்பு கோரப்பட்ட ஒப்ப ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளே தொடரவும் முடிவு செய்யப்பட்டது.
4) இணையதளத்தின் மூலம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பயனற்ற மற்றும் உபயோகமற்ற சோக்குகளின் மதிப்பு ரூ. 63,67,400/– க்கு நிர்ணயம் செய்யப்பட்டது

குழுவின் பரிந்துரையின் பேரில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்புகளின் அடிப்படையில் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு குறிப்பு வைக்கப்பட்டது.

கூடுதல் ஆணையாளர் (பணிகள்) அவர்கள் கலந்தாய்வு செய்து தற்போதைய விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பயனற்ற கழிவுகள் மற்றும் உபயோகமற்ற சோக்குகளின் விலை நிர்ணயம் செய்து குறிப்பு அனுப்புமாறு தெரிவித்துள்ளார்கள்.

இதன் அடிப்படையில் 02/03/2013 அன்று மேற்பார்வை பொறியாளர் / மின்சாரம் அவர்கள் அலுவலகத்தில் குழு கூட்டப்பட்டு பயனற்ற கழிவுகளின் மதிப்பு நிர்ணயம் செய்ய கீழ்கண்டவை முடிவு கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

1) w.w.w.recycleinme. com இணையதளத்திலிருந்து 02/01/2013 முதல் 31/01/2013 இடைப்பட்ட காலத்தில் உள்ள பயனற்ற கழிவுகளின் விலைகள் எடுத்துகொண்டு ஒப்பத்தொகை நிர்ணயம் செய்யவும்.
2) மேலே கூறப்பட்டுள்ள காலத்தில் பயனற்ற கழிவுகளின் அதிகப்படியான விலை எடுக்கப்பட்டு பயனற்ற கழிவுகளின் விலை நிர்ணயம் செய்யவும்.

| வ. எண் | பொருட்களின் விவரம் | முந்தய விலை 11/10/2012 முதல் 10/11/2012 வரைரூ. | தற்போதைய விலை 02/01/2013 முதல் 31/01/2013 வரை ரூ. |
|---|---|---|---|
| 1 | எம். எஸ். இரும்பு பொருட்கள் | 21.00 | 25.00 |
| 2 | இரும்பு பொருட்கள் | 21.00 | 25.50 |
| 3 | அலுமினிய பொருட்கள் | 89.50 | 94.00 |
| 4 | செம்பு பொருட்கள் | 400.00 | 425.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | பித்தளை பொருட்கள் | 290.00 | 295.00 |
| 6 | பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் மரசாமான்கள் | 3.50 | 6.00 |

1) இணையதளத்திலிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டு பயனற்ற கழிவுகளின் விலை நிர்ணயம் செய்யப்படும்போது வரிகள் குறைக்கப்படாமல் விலை நிர்ணயம் செய்யவும்

2) இணையதளத்திலிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பயனற்ற மற்றும் உபயோகமற்ற சோக்குகளின் மதிப்பு.

**II st LOT**

| வ. எண் | பொருட்களின் விவரம் | மொத்த நிகர எடை (கி.கிராம்) | இணையதளம் மூலம் பெறப்பட பயனற்ற கழிவுகளின் விலை / (கி.கிராம்) ரூ. | பயனற்ற கழிவுகளின் மொத்த விலை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | எம். எஸ் இரும்பு பொருட்கள் | 128562.75 | 25.00 | 3214068.75 |
| 2 | இரும்பு பொருட்கள் | 21802.00 | 25.50 | 555951.00 |
| 3 | அலுமினிய பொருட்கள் | 809.46 | 94.00 | 76089.24 |
| 4 | செம்பு பொருட்கள் | 616.35 | 425.00 | 261948.75 |
| 5 | பித்தளை பொருட்கள் | 525.36 | 295.00 | 154981.20 |
| 6 | பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் மரசாமான்கள் | 675.44 | 6.00 | 4052.64 |
| | | | மொத்தம் | 4267091.58 |

மேற்படி கழிவுப்பொருட்களின் மதிப்பு நிலைக்குழு(பணிகள்) 22.04.2013 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஏற்கப்பட்டது. மேலும், இத்தொகுப்பினை விற்பனை செய்ய ஒப்பம் மற்றும் ஏலத்திற்கான ஒப்பங்கள் கோர அனுமதிக்கப்பட்டு 27.5.2013 அன்று ஏலநாளாக அறிவிக்கப்பட்டது. ஏலநாளான 25.7.2013 அன்று ஒரே ஒரு ஏலதாரர் கலந்து கொள்ள முன்வந்தார். ஆனால், அவர் ஏலத்தொகை ஏதும் கேட்க முன்வரவில்லை.

எந்த நிறுவனமும் இத்தொகுப்பின் விற்பனைக்காக ஏலத்தில் பங்கேற்காதலால் மின்னணு ஏலம் மூலம் ஏலம் நடத்தி கழிவு பொருட்களை விற்பனை செய்ய இணை ஆணையர் 28.08.2013 நாளிட்ட அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

மின்னணு ஏலத்திற்கான நாள்.08.11.2013 பிற்பகல் 3.00 என அறிவிக்கப்பட்டது. மின்னணு ஏலத்தில் பங்குபெற ஒரே ஒரு நிறுவனம் தக்க ஆவணங்கள் அளித்து தகுதிபெற்றது. ஆனால், தகுதி பெற்ற இந்நிறுவனமும் மின்னணு ஏலத்தில் ஏலத்தொகை எதுவும் அளிக்கவில்லை.

எனவே, வேப்பேரி கிடங்கில் வைக்கப்பட்டுள்ள பயனற்ற150.36 டன் எடையில் இரும்பு பொருட்கள் 809.46கி.கி எடையில் அலுமினிய பொருட்கள், 616.35 கிகி எடையில் செம்பு பொருட்கள், 525.36 கி.கி எடையில் பித்தளை பொருட்கள் மேலும் 675.44 கி.கி எடையில் பிலாஸ்டிக் மற்றும் மரசாமான்கள்ஆகிய பயனற்ற கழிவுகளை ரூ.42,67,100/– மதிப்பில் விற்பனை செய்ய மறு மின்னணு மூலம் ஏலம் கோர ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) & (2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.588/ 2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண். 607/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.10.ந.க.எண்அ1/ 2692 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.775/2013 **பொருள் எண்.43**

**மண்டலம்–10, பகுதி–30 – வார்டு–141 – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று வீடு கட்டும் பயனாளி திரு.ஜி.சண்முகம் அவர்கள் பணி தொடங்காததால் அவர்களுக்கு பதில் திருமதி.எஸ்.ரேணுகா அவர்களுக்கு பணி ஆணை வழங்க அனுமதி.**

மண்டலம்–10, பகுதி–30, வார்டு–11ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகட்டி கொள்ள கதவு எண்.28/37 சித்தி விநாயகர் கோயில் தெரு, கண்ணம்மாள் பேட்டை, தி.நகர் சென்னை–600 017 வசிக்கும் திரு.ஜி.சண்முகம் அவர்களுக்கு மன்ற தீர்மானத்தின் படி பணி ஆணை வழங்கப்பட்டது. ஆனால் இது நாள் வரை போதிய நிதியின்மை, மற்றும் கட்டும் வரை குடியிருக்க வீடு போன்ற காரணங்களால் அனுமதிக்கப்பட்டவாறு வீடு கட்டும் பணியினை துவக்க வில்லை.

எனவே திரு.ஜி.சண்முகம் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணி ஆணையை ரத்து செய்து, மாமன்ற உறுப்பினர் வார்டு–141 அவர்கள் பரிந்துரை செய்த பயனாளி திருமதி.எஸ்.ரேணுகா, மனை எண்.77, கதவு எண்.3, தென்மேற்கு போக் சாலை, தி.நகர் அவர்களுக்கு பணி ஆணை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.586/2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.603/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.14.ந.க.எண்.இ1 /4013–1/2013</u>**

**<u>முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்களின் 18.11.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.776/2013 **பொருள் எண்:44**

**<u>மண்டலம்-14– வார்டு எண்184 – 2013–14ஆம் ஆண்டின் மூலதனப் பணிகளுக்கான ஒப்பம் கோரப்பட்டது – பணியினை வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம்-14ல் உள்ள வார்டு-184ல் 7எண்ணிக்கையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைப்பதற்கு 2013-2014 ம் ஆண்டிற்கான மூலதன நிதியில் இருந்து ரூ.1,19,90,735.75/- (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது இலட்சத்து தொன்னூறுராயிரத்து ஏழுநூற்று முப்பத்திஐந்து மற்றும் ஏழுபத்து ஐந்து பைசா மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 26.09.2013அன்று ஒப்பம் கோரப்பட்டது. இந்த ஒப்பம் 2 உறைகள் கொண்ட ஒப்பம் ஆகும்.இந்த ஒப்பம் 04.10.2013 நாளன்று திறக்கப்பட்டு ஒப்பந்ததாரரின் தொழில்நுட்பத் தகுதிக்காக பரிசீலிக்கப்பட்டது.இந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விவரம் பின்வருமாறு.

1. திரு.வெங்கடேஷ்பாபு
2. திருவாளர்கள் டிரேக் அன்டு ஸ்கல் வாட்டர் அன்டு எனர்ஜி இந்தியா பிரைவேட் லிட்

இந்த ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதி ஒப்பந்த புத்தகத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி ஆராயப்பட்டது. இதன் பின்னர் 21.10.2013 அன்று தகுதிப்பெற்ற ஒப்பந்ததாரர்களின்ஒப்பம் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. இதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | அலுவலக மதிப்பீட்டு தொகை (2012–13 ன்படி) | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவிகிதம் | ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.வெங்கடேஷ்பாபு | 1,19,90,735.75 | (+) 2.09 % | 1,22,40,945.00 | |
| 2 | டிரேக் அன்டு ஸ்கல் வாட்டர் அன்டு எனர்ஜி இந்தியா பிரைவேட் லிட் | 1,19,90,735.75 | (+) 16.03 % | 1,39,13,450.00 | |

மேற்கண்ட பட்டியலில் இருந்து திரு.வெங்கடேஷ்பாபு 2012–13 அலுவலக விலைப்பட்டியலுக்கு(+)2.09 அதிகமாக ரூ. 1,22,40,945.00க்கு விலைப்புள்ளிகள் அளித்துள்ளது தெரிகிறது.

மேற்கண்டவாறு விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ்பாபு அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு.வெங்கடேஷ்பாபு அவர்கள் 22.10.2013 நாளிட்ட கடிதத்தில் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி திரு.வெங்கடேஷ்பாபு அவர்களின் ஒப்பத்தொகை ரூ. 1,22,40,945.00 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து நாற்பதாரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஐந்து மட்டும்)ஆகும்.

இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 2.09% சதவிகிதம் அதிகமாகும். இதனை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 12.47% விழுக்காடு குறைவாகும். சந்தை விலை நாள்.19.10.2013. இதனை 2013–14 அலுவலக விலையோடு ஒப்பிடுகையில் (–) **6.64%** சதவிகிதம் குறைவாகும்.

இந்த விவரங்கள் மண்டல அலுவலர் 14 அவர்களால் கீழ்கண்டவாறு ஒப்பக் குழுமத்திற்கு சுற்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளியானது இரண்டு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு.வெங்கடேஷ்பாபு அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,22,40,945.00 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஐந்து மட்டும்)ஆகும். இது 2012–13 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலுக்கு (+) 2.09சதவிகிதம் அதிகமாகும். இதனை சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–) 12.47% சதவிகிதம் குறைவாகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

## இந்த விவரங்கள் அனைத்தும் அட்டவணையாக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | அலுவலக விலை 2012.13 | ஒப்பந்ததாரரின் பெயர் திரு.வெங்கடேஷ்பாபு | | விலைக்குறைப்புக் கான கடிதம் நாள். 22/10/2013 | | சந்தைவிலை நாள். (19/10/2013) | | அலுவலக விலை 2013.14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | தொகை | சதவிகிதம் (%) | தொகை | சதவிகிதம் (%) | தொகை | சதவிகிதம் (%) | தொகை |
| 1 | 7 சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகள் | 1,19,90,735.75 | 1,22,40,945.00 | + 2.09 | 1,22,40,945.00 | + 2.09 | 13971267.60 | -12.47 | 1,31,11,070.70 (-) 6.64 சதவீகிதம் |

இவையனைத்தும் ஒப்பக்குழுவால் ஆராயப்பட்டு சுற்றின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிக்கு நவம்பர் மாத கடைசியில் நடைபெறவிருக்கும் மாமன்ற கூட்டத்தின் மூலம் அனுமதி பெறப்படவேண்டும். மன்றக்கூட்டம் நடைபெற நீண்ட இடைவெளி இருப்பதால் வேலை தொடங்கி செய்வதற்கான ஒரு மாத காலம் விரையமாகிவிடும் என்ற நோக்கிலும், முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி வேலைகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நவீன கருவியின் மூலம் பணியின் தன்மையும், சிமென்டின் தரத்தின் அளவும் பரிசோதித்த பிறகே பணப்பட்டித்தொகை வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டு ஒப்பந்தப்பணி ஆணை வழங்கப்படும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினைதிரு.வெங்கடேஷ்பாபுஅவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 2.09% அதிகமான ஒப்பத்தொகை ரூ.1,22,40,945.00 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஐந்து மட்டும்)க்கு பணியை ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண். 581/ 2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.598/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.14.ந.க.எண்.அ2/4013–2/2013**

**முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்களின் 18.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.777/2013 **பொருள் எண்.45**

**மண்டலம்-14– வார்டு எண்184 – 2013–14ஆம் ஆண்டின் மூலதனப் பணிகளுக்கான ஒப்பம் கோரப்பட்டது – மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்-14ல் உள்ள வார்டு-184ல் **16** எண்ணிக்கையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைப்பதற்கு **2013-2014** ம் ஆண்டிற்கான மூலதன நிதியில் இருந்து **ரூ.1,34,51,999.20/-** (ரூபாய் ஒரு கோடியேமுப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தொராயிரத்து தொள்ளாயிரத்து தொன்னுற்றுன்பது மற்றும் இருபது பைசா மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 26.09.2013அன்று ஒப்பம் கோரப்பட்டது. இந்த ஒப்பம் 2 உறைகள் கொண்ட ஒப்பம் ஆகும். இந்த ஒப்பம் 04.10.2013நாளன்று திறக்கப்பட்டு ஒப்பந்ததாரரின் தொழில்நுட்பத் தகுதிக்காக பரிசீலிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விவரம் பின்வருமாறு.

1. திரு.எஸ்.பாஸ்கரன்
2. திருவாளர்கள் டிரேக் அன்டு ஸ்கல் வாட்டர் அன்டு எனர்ஜி இந்தியா பிரைவேட் லிட்

இந்த ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதி ஒப்பந்த புத்தகத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி ஆராயப்பட்டது. இதன் பின்னர் 21.10.2013 அன்று தகுதிப்பெற்ற ஒப்பந்ததாரர்களின்ஒப்பம் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. இதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | அலுவலக மதிப்பீட்டு தொகை (2012–13 ன்படி) | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவிகிதம் | ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ். பாஸ்கரன் | **1,34,51,999.20** | (+) 2.24 % | 1,37,53,255.30 | |
| 2 | டிரேக் அன்டு ஸ்கல் வாட்டர் அன்டு எனர்ஜி இந்தியா பிரைவேட் லிட் | **1,34,51,999.20** | (+) 14.56 % | 1,54,10,461.00 | |

மேற்கண்ட பட்டியலில் இருந்து **திரு.எஸ்.பாஸ்கரன்**2012–13 அலுவலக விலைப்பட்டியலுக்கு (+) 2.24 அதிகமாக **ரூ.1,37,53,255.30**க்கு விலைப்புள்ளிகள் அளித்துள்ளது தெரிகிறது.

மேற்கண்டவாறு விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் **திரு.எஸ்.பாஸ்கரன்,** அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு கோரப்பட்டது. **திரு.எஸ்.பாஸ்கரன்,** அவர்கள் 22.10.2013 நாளிட்ட கடிதத்தில் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி **திரு.எஸ்.பாஸ்கரன்,** அவர்களின் ஒப்பத்தொகை **ரூ.1,37,53,255.30 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்து மற்றும் முப்பது பைசா மட்டும்)** ஆகும்.

இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 2.24%சதவிகிதம் அதிகமாகும். இதனை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 11.36% விழுக்காடு குறைவாகும். சந்தை விலை நாள்.19.10.2013. இதனை 2013–14 ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட (–) 5.74 சதவிகிதம் குறைவாகும்.

இந்த விவரங்கள் மண்டல அலுவலர் 14அவர்களால் கீழ்கண்டவாறு ஒப்பக் குழுமத்திற்கு சுற்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளியானது இரண்டு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான **திரு.எஸ். பாஸ்கரன்,** அவர்களின் ஒப்பத்தொகை **ரூ. 1,37,53,255.30 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்து மற்றும் முப்பது பைசா மட்டும்)**ஆகும். இது **2012–13** ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலுக்கு (+) 2.24சதவிகிதம் அதிகமாகும். இதனை சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–) 11.36% சதவிகிதம் குறைவாகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

இந்த விவரங்கள் அனைத்தும் அட்டவணையாக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் விவரம் | அலுவலக விலை 2012–13 | ஒப்பந்ததாரரின் பெயர் திரு.எஸ். பாஸ்கரன் | | விலைக்குறைப்புக் கான கடிதம் நாள். 22/10/2013 | | சந்தைவிலை நாள். (19/10/2013) | | அலுவலக விலை 2013–14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | தொகை | சதவிகிதம் (%) | தொகை | சதவிகிதம் (%) | தொகை | சதவிகிதம் (%) | தொகை |
| 1 | 16 சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகள் | 1,34,51,999.20 | 1,37,53,255.30 | + 2.24 | 1,37,53,255.30 | + 2.24 | 1,55,16,668.00 | -11.36 | 1,45,90,686.43 (-) 5.74 சதவிகிதம் |

இவையனைத்தும் ஒப்பக்குழுவால் ஆராயப்பட்டு சுற்றின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிக்கு நவம்பர் மாத கடைசியில் நடைபெறவிருக்கும் மாமன்ற கூட்டத்தின் மூலம் அனுமதி பெறப்படவேண்டும். மன்றக்கூட்டம் நடைபெற நீண்ட இடைவெளி இருப்பதால் வேலை தொடங்கி செய்வதற்கான ஒரு மாத காலம் விரையமாகிவிடும் என்ற நோக்கிலும், முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி வேலைகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நவீன கருவியின் மூலம் பணியின் தன்மையும், சிமென்டின் தரத்தின் அளவும் பரிசோதித்த பிறகே பணப்பட்டித்தொகை வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டு ஒப்பந்தப்பணி வழங்கப்படும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை**திரு.எஸ். பாஸ்கரன்,** அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 2.24% அதிகமான ஒப்பத்தொகை **ரூ. 1,37,53,255.30 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்து மற்றும் முப்பது பைசா மட்டும்)**க்கு பணியை ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண். 582/ 2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.599/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.14.ந.க.எண்.அ2/4013–3/2013**

**முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்களின் 18.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.778/2013 **பொருள் எண்:46**

**மண்டலம்-14– வார்டு எண்186 – 2013–14ஆம் ஆண்டின் மூலதனப் பணிகளுக்கான ஒப்பம் கோரப்பட்டது – பணியினை வழங்க மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்-14 ல் உள்ள வார்டு-186ல் 16 எண்ணிக்கையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைப்பதற்கு 2013-2014 ம் ஆண்டிற்கான மூலதன நிதியில் இருந்து ரூ.1,20,13,529.80/- (ரூபாய் ஒரு கோடியேஇருபது இலட்சத்து பதிமூன்றாயிரத்து ஐநூற்று இருபத்து ஒன்பது மற்றும் எண்பது பைசா மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 26.09.2013அன்று ஒப்பம் கோரப்பட்டது. இந்த ஒப்பம் 2 உறைகள் கொண்ட ஒப்பம் ஆகும். இந்த ஒப்பம் 04.10.2013நாளன்று திறக்கப்பட்டு ஒப்பந்ததாரரின் தொழில்நுட்பத் தகுதிக்காக பரிசீலிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விவரம் பின்வருமாறு.

1. திரு.வெங்கடேஷ்பாபு
2. திருவாளர்கள் டிரேக் அன்டு ஸ்கல் வாட்டர் அன்டு எனர்ஜி இந்தியா பிரைவேட் லிட்

இந்த ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதி ஒப்பந்த புத்தகத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி ஆராயப்பட்டது. இதன் பின்னர் 21.10.2013 அன்று தகுதிப்பெற்ற ஒப்பந்ததாரர்களின்ஒப்பம் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. இதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | அலுவலக மதிப்பீட்டு தொகை (2012–13 ன்படி) | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவிகிதம் | ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.வெங்கடேஷ்பாபு | 1,20,13,529.80 | (+) 1.83% | 1,22,33,511.90 | |
| 2 | டிரேக் அன்டு ஸ்கல் வாட்டர் அன்டு எனர்ஜி இந்தியா பிரைவேட் லிட் | 1,20,13,529.80 | (+) 15.81 % | 1,39,12,420.00 | |

மேற்கண்ட பட்டியலில் இருந்து திரு.வெங்கடேஷ்பாபு 2012–13 அலுவலக விலைப்பட்டியலுக்கு +1.83 அதிகமாக ரூ.1,22,33,511.90க்கு விலைப்புள்ளிகள் அளித்துள்ளது தெரிகிறது.

மேற்கண்டவாறு விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ்பாபு அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு.வெங்கடேஷ்பாபு அவர்கள் 22.10.2013 நாளிட்ட கடிதத்தில் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி திரு.வெங்கடேஷ்பாபுஅவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,22,33,511.90 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து முப்பத்திமூன்றாயிரத்து ஐநூற்று பதினொன்று மற்றும் தொன்னூறு பைசா மட்டும்)

இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 1.83% சதவிகிதம் அதிகமாகும். இதனை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 13.53% விழுக்காடு குறைவாகும். சந்தை விலை நாள்.19.10.2013.இதனை 2013–14 ஆம் ஆண்டு அலுவலக விலையோடு ஒப்பிடுகையில் (–) 6.11 சதவிகிதம் குறைவாகும்.

இந்த விவரங்கள் மண்டல அலுவலர் 14 அவர்களால் கீழ்கண்டவாறு ஒப்பக் குழுமத்திற்கு சுற்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளியானது இரண்டு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு.வெங்கடேஷ்பாபுஅவர்களின் ஒப்பத்தொகை ரூ. 1,22,33,511.90 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து முப்பத்திமூன்றாயிரத்து ஐநூற்று பதினொன்று மற்றும்தொன்னூறு பைசா மட்டும்)ஆகும். இது 2012–13 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலுக்கு (+)1.83சதவிகிதம் அதிகமாகும். இதனை சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)13.53% சதவிகிதம் குறைவாகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

இந்த விவரங்கள் அனைத்தும் அட்டவணையாக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் விவரம் | அலுவலக விலை 2012–13 | ஒப்பந்ததாரரின் பெயர் திரு.வெங்கடேஷ்பாபு | | விலைக்குறைப்புக் கான கடிதம் நாள். 22/10/2013 | | சந்தைவிலை நாள். (19/10/2013) | | அலுவலக விலை 2013–14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | தொகை | சதவிகிதம் (%) | தொகை | சதவிகிதம் (%) | தொகை | சதவிகிதம் (%) | தொகை |
| 1 | 16 சிமெண்ட் கான்கிரீட் சாலைப் பணிகள் | 1,20,13,529.80 | 12233511.90 | + 1.83 | 12233511.90 | + 1.83 | 14147094.60 | -13.53 | 13029075.89 (-) 6.11 சதவிகிதம் |

இவையனைத்தும் ஒப்பக்குழுவால் ஆராயப்பட்டு சுற்றின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிக்கு நவம்பர் மாத கடைசியில் நடைபெறவிருக்கும் மாமன்ற கூட்டத்தின் மூலம் அனுமதி பெறப்படவேண்டும். மன்றக்கூட்டம் நடைபெற நீண்ட இடைவெளி இருப்பதால் வேலை தொடங்கி செய்வதற்கான ஒரு மாத காலம் விரையமாகிவிடும் என்ற நோக்கிலும், முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி வேலைகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நவீன கருவியின் மூலம் பணியின் தன்மையும், சிமெண்டின் தரத்தின் அளவும் பரிசோதித்த பிறகே பணப்பட்டித்தொகை வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டு ஒப்பந்தப்பணி ஆணை வழங்கப்படும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினைதிரு.வெங்கடேஷ்பாபுஅவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 1.83% அதிகமான ஒப்பத்தொகை 1,22,33,511.90 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து முப்பத்திமூன்றாயிரத்து ஐநூற்று பதினொன்று மற்றும்தொன்னூறு பைசா மட்டும்)க்கு பணியை ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண். 583/ 2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.600/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>மி.து.ந.க.எண்/மே/பி1/13058/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20/11/2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.779/2013 **பொருள் எண்.47**

**<u>மின்துறை – புதிதாக கட்டப்படுகின்ற ரிப்பன் கட்டிட இணை அலுவலக கட்டடத்திற்கு மின்வசதி செ ய்யும் பணி – ஒப்பந்ததாரர் திருவாளர் சாந்தி எண்டர்பிரைசஸ் எலக்டிரிகல்ஸ் பிரைவேட் லிமிடேட்க்கு ஒப்பந்த கால நீட்டிப்பு (EOT) செய்ய அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி மண்டலம்–5 வார்டு–58 வாளகத்தில் வடக்கு பகுதியில் கீழ்தளம் தரைதளம் மற்றும் 5 தளங்கள் கொண்ட இணை அலுவலக கட்டடத்திற்கு மின்வசதி செய்யும் பணிக்கு திருவாளர் லார்சன் ஆண்டு டியுப்ரோ லிமிடேட் என்ற கலந்தாளுநர் அளித்த விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.7,23,39,000/– மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த திருவாளர் சாந்தி எண்டர்பிரைசஸ் எலக்டிரிகல்ஸ் பிரைவேட் லிமிடேட்க்கு பணி ஆணை எண்: ELDC No. SM II/P1 / 4928/11, தேதி. 16.08.2012. தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றது.

ஒப்பந்த உடன்படிக்கையின்படி இப்பணிக்கான ஒப்பந்த காலம் 270 நாட்கள் ஆகும். இதன்படி இப்பணிக்கான ஒப்பந்த காலம் 14.05.2013 அன்று முடிவடைந்தது, இதற்கு முன்பாக சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் 23.05.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பந்தகால நீட்டிப்பு செய்ய கோரியதை தொடர்ந்து மேற்பார்வை பொறியாளர் மின்சாரம் மற்றும் தலைமை பொறியாளர் அவர்களின் உத்தரவின்படி இரண்டுமாதங்கள் 15. 05. 2013 முதல் 14.07.2013 வரை ஒப்பந்த கால நீட்டிப்பு (EOT) வழங்கப்பட்டது.

இக்கட்டிடம் நவினமான கட்டிடம் என்பதால் கட்டடத்துறையின் உள்கட்டமைப்பு வசதிகளுடன் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. தற்சமயம் 5 தளங்களிலும் கலந்தாளுநர் திருவாளர் லார்சன் அண்டு டியுப்ரோ மூலம் தொழில் நுட்ப அனுமதி பெற்றபின் மின்வசதி (ஒயரிங்) பணிகள் நடைபெற்று வருகின்றது. தரை தளத்தில் துணை மின்நிலையம் அமைக்கும் பணிகளும் நடந்து வருகின்றது.

மேற்படி கட்டடத்தின் தளத்தை Post Tension முறையில் செய்ததால் தரை தளத்தில் துணைமின் நிலையத்திற்கான கேபிள்களை மெயின் பேனல் போர்டு–ல் இருந்து கீழ் தளத்திற்கு எடுத்து செல்ல core cutting பணி கட்டடத்துறையில் செய்து தர கால அவகாசம் தேவைப்படுகிறது.

அனைத்து தளங்களிலும் உள்ள மின்சாதன அறையின் கதவுகள் Fire Proof கதவுகளாக கட்டடத் துறையில் பொருத்தப்பட வேண்டி உள்ளது.

மின்மாற்றி (Transformer) தரைதளத்தின் மேற்கு பக்கத்தில் நிறுவப்பட்டுள்ள இடத்தில் மதில் சுவர் (Partition) கட்டடத்துறையால் நிறுவப்படவேண்டி உள்ளது.

ஜெனரேட்டர் டிசல் டாங்க் அமைக்க கட்டிட துறையால் மேடை நிறுவப்பட வேண்டும்.

உள்கட்டமைப்பு பார்ட்டிஷன், உலோகத்தகடு ஒப்பனை உட்கூரை போன்ற பணிகள் சரிவர நிறைவேற்றப்பட்ட பின் மின் ஒளி விளக்குகள் பொருத்தப்பட வேண்டியுள்ளது.

எல்லா தளங்களிலும் தரையில் பதிக்கப்பட்டு உள்ள அலுமினிய தட குழாய்கள் ( Alu Race ways) முலம் மின் கேபிள்கள், கணிணி மற்றும் தொலைபேசி கேபிள்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

எல்லா தளங்களிலும் Modular Furniture கட்டிட துறை மூலம் நிறுவப்பட்ட பின்னரே மின், கணிணி மற்றும் தொலைபேசி இணைப்புகள் செய்யப்பட வேண்டியுள்ளது.

தரைதளத்தில் கலந்தாய்வு கூடத்திற்காக தற்சமயம் தற்காலிக தடுப்பு சுவர் (PARTITION) நிறுவப்பட்டு வருகின்றது. இக்கலந்தாய்வு கூடத்திற்கான மின்பணிகள் மற்றும் மின் ஒளி விளக்குகள் வசதி செய்வதற்கான கால அவகாசம் தேவைப்படுகிறது.

UPS அறை கட்டடத்துறையால் ஒப்பனைத்தரை (False Flooring) நிறுவப்பட்ட பின் மின் கேபிள்கள் அமைக்கப்பட வேண்டி உள்ளது.

கட்டடத்துறையில் வெளிப்புற சாலைகள் ஏற்படுத்தப்பட்ட பின் மின் சாதனங்களுக்காக Earthing செய்யப்பட வேண்டியுள்ளது. மேலும் தெரு விளக்குகளும் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

மேற்படி பணிகள் யாவும் கட்டடத்துறையுடன் இணைந்து செயல்பட வேண்டியுள்ளதால். இப்பணிக்கான ஒப்பந்தப் பணிகாலத்தை 28.02.2014 வரை நீட்டிப்பு செய்யலாம் என கருதப்படுகிறது.

மேலும் திருவாளர் சாந்தி எண்டர்பிரைசஸ் எலக்டிரிகல்ஸ் பிரைவேட் லிமிடேட்க்கு வழங்கப்பட்ட பணி ஆணையின் விலை அடிப்படையில் விலை மாறுபாடு கோராமல் பணி நீட்டிப்பு காலம் வரை பணிகள் நிறைவேற்றப்படும் என 30.10.2013 அன்றைய தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, மேற்குறிப்பிட்ட விரிவான காரணங்களுக்காக இப்பணிக்கான ஒப்பந்த பணிகாலத்தை (EOT) 28.02.2014 வரை நீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.589/ 2013ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.608/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மி.து.ந.க.எண்/மே/பி1/13059/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 20.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.780/2013 **பொருள் எண். 48**

**மின்துறை – புதிதாக கட்டப்படுகின்ற ரிப்பன் கட்டிட இணை அலுவலக கட்டடத்திற்கு குளிர்சாதனவசதி செய்யும் பணி – ஒப்பந்ததாரர் திருவாளர் Hitachi Home & Life Solution (India) Limitedக்கு ஒப்பந்த கால நீட்டிப்பு (EOT) செய்ய – அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–5 வார்டு–58 (பழைய மண்டலம்–3, வார்டு–47) ரிப்பன் மாளிகை வாளகத்தில் வடக்கு பகுதியில் கீழ்தளம் தரைதளம் மற்றும் 5 தளங்கள் கொண்ட இனை அலுவலக கட்டடத்திற்கு குளிர்சாதனவசதி செய்யும் பணிக்கு திருவாளர் லார்சன் ஆண்டு டியுப்ரோ லிமிடேட் என்ற கலந்தாளுநர் அளித்த விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.5,14,76,000/– மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த திருவாளர் Hitachi Home & Life Solution (India) Limited, Chennai -28க்கு பணி ஆணை எண்: ELDC No. SM II/P1 / 1098/12, தேதி. 22.08.2012. தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றது.

ஒப்பந்த உடன்படிக்கையின்படி இப்பணிக்கான ஒப்பந்த காலம் 180 நாட்கள் ஆகும். இதன்படி இப்பணிக்கான ஒப்பந்த காலம் 19.02.2013 அன்று முடிவடைந்தது, இதற்கு முன்பாக சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் 25.02.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பந்தகால நீட்டிப்பு செய்ய கோரியதை தொடர்ந்து மேற்பார்வை பொறியாளர் மின்சாரம் மற்றும் தலைமை பொறியாளர் அவர்களின் உத்தரவின்படி இரண்டுமாதங்கள் 20.02.2013 முதல் 19.04.2013 வரை ஒப்பந்த கால நீட்டிப்பு (EOT) வழங்கப்பட்டது.

இக்கட்டிடம் நவினமான கட்டடம் என்பதால் கட்டடத்துறையின் உள்கட்டமைப்பு வசதிகளுடன் இணைந்து செய்யப்பட்ட வேண்டியுள்ளது. தற்சமயம் 5 தளங்களிலும் கலந்தாளுநர் திருவாளர் லார்சன் ஆண்டு டியுப்ரோ லிமிடேட் மூலம் தொழில் நுட்ப அனுமதி பெற்றபின் Ducting பணிகள் நடைபெற்று கொண்டுள்ளது. தரை தளத்தில் கலாந்தய்வு கூடம் அமைப்பதற்கும் Dust Design கலந்தாளுநரின் அனுமதி பெறப்பட்டு செய்யப்பட வேண்டியுள்ளது.

மேற்படி கட்டிடத்தில் 5 தளங்களிலும் AHU அறையில் Fire Proof கதவுகள் மற்றும் வடிகால் வசதி கட்டடத் துறையில் செய்து தரப்பட வேண்டும்.

கட்டடத்தில் Structural glazing, தரை டைல்கள் பதித்து கட்டடம் முழுவதும் Dust Proof செய்து குளிர்சாதன பணிகள் நிறைவுற்றபின் குளிர்சாதன மின் உபகரணங்களை இயக்கப்பட வேண்டியுள்ளது.

கட்டடத்தின் உள்கட்டமைப்பு பார்ட்டிஷன், உலோகத்தகடு ஒப்பனை உட்கூரை மற்றும் கதவுகள் போன்ற இனங்களின் பணிகள் கட்டடத்துறையால் செய்து முடிக்கப்பட வேண்டும்.

மேற்படி கட்டிடத்தில் குளிரூட்டி (CHILLER) இயந்திரத்திற்கு தேவைப்படும் குளிர்விக்கப்பட்ட நீரானது மேல்நிலை குடிநீர் தொட்டியிலிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. இதற்கான கட்டமைப்பு வசதி கட்டடத்துறையால் செய்து முடிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டு கட்டிடடத்துறையால் மேற்படி பணிகள் நிறைவேற்றப்பட்ட பின் HVAC பணிகள் செய்ய வேண்டியுள்ளதால் இப்பணிக்கான ஒப்பந்தபணி காலத்தை 28.02.2014 வரை நீட்டிப்பு செய்யலாம் என்று கருதப்படுகிறது.

மேலும் திருவாளர் Hitachi Home & Life Solution (India) Limited, Chennai -28க்கு வழங்கப்பட்ட பணி ஆணையின் விலை அடிப்படையில் விலை மாறுபாடு கோராமல் பணி நீட்டிப்பு காலம் வரை பணிகள் நிறைவேற்றப்படும் என 30.10.2013 அன்றைய தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

**எனவே, மேற்குறிப்பிட்ட விரிவான காரணங்களுக்காக இப்பணிக்கான ஒப்பந்த பணிகாலத்தை (EOT) 28.02.2014 வரை நீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண். 590 / 2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண். 609/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மி.து.ந.க.எண்/மே/பி1/13060/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14/11/2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.781/2013 **பொருள் எண்.49**

**மின்துறை – புதிதாக கட்டப்படுகின்ற ரிப்பன் கட்டிட இணை அலுவலக கட்டடத்திற்கு தீயணைப்பு வசதி செய்யும் பணி – ஒப்பந்ததாரர் திருவாளர் M/s M.I. Industrial Products (P) Limited, Puducherry க்கு ஒப்பந்த கால நீட்டிப்பு (EOT) செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–5 வார்டு–58 (பழைய மண்டலம்–3, வார்டு–47) ரிப்பன் மாளிகை வாளகத்தில் வடக்கு பகுதியில் கீழ்தளம் தரைதளம் மற்றும் 5 தளங்கள் கொண்ட இனை அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு 2007–08 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலை விவரப்படி தோராய திட்ட மதீப்பிடு ரூ.1,75,96,500/– மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தங்கள் அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. திருவாளர் M/s M.I. Industrial Products (P) Limited, Puducherry -க்கு பணி ஆணை எண்: ELDC No. SM II/P1 / 6879/11, தேதி. 19.07.2012. தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றது.

ஒப்பந்த உடன்படிக்கையின்படி இப்பணிக்கான ஒப்பந்த காலம் 180 நாட்கள் ஆகும். இதன்படி இப்பணிக்கான ஒப்பந்த காலம் 17.01.2013 அன்று முடிவடைந்தது, இதற்கு முன்பாக சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் 25.01.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பந்தகால நீட்டிப்பு செய்ய கோரியதை தொடர்ந்து மேற்பார்வை பொறியாளர் மின்சாரம் மற்றும் தலைமை பொறியாளர் அவர்களின் உத்தரவின்படி இரண்டுமாதங்கள் 18.01.2013 முதல் 17.03.2013 வரை ஒப்பந்த கால நீட்டிப்பு (EOT) வழங்கப்பட்டது.

இக்கட்டிடம் நவினமான கட்டடம் என்பதால் கட்டடத்துறையின் உள்கட்டமைப்பு வசதிகளுடன் இணைந்து செய்யப்பட வேண்டியுள்ளது. தற்சமயம் எல்லா தளங்களிலும் கலந்தாளுநர் M/s Larson & Toubro மூலம் தொழில் நுட்ப அனுமதி பெற்ற பின் ஹைட்ரண்ட் மற்றும் ஸ்பிரிங்கிளர் குழாய்கள் பொருத்தும்பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது. தற்சமயம் ஸ்பிரிங்கர் கிளை குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

தீ தடுப்பு செய்யும் பணியில் கட்டடத்தின் உள்கட்டமைப்பு பார்ட்டிஷன், உலோகத்தகடு ஒப்பனை உட் கூரை போன்ற இனங்கள் நிறைவு பெற வேண்டியுள்ளது. இப்பணிகள் நிறைவு பெற்றபின் ஸ்பிரிங்கிளர் பல்புகள் மற்றும் சென்சார்கள் உட்கூரையில் பொருத்தப்பட வேண்டியுள்ளது.

தீ எச்சரிக்கை கட்டுப்பாட்டுக்கருவி (Fire Alarm Control Panel) கேபிள்கள் இணைத்து நிறுவப்பட வேண்டியுள்ளது.

மேலும் ஹைட்ரண்ட் பைப்புகளுக்கு தேவைப்படும் நீர் மேல் நிலை குடிநீர் தொட்டியிலிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. இதற்கான கட்டமைப்பு வசதி கட்டிடதுறையால் மேற்படி கட்டடத்தில் செய்யப்பட கால அவகாசம் தேவைப்படுகிறது.

மேலும், கீழ் தளத்திலுள்ள தீ தடுப்பு பம்புகளுக்கு மின்வசதி தேவைப்படுகிறது.

கட்டடத்துறையில் வெளிப்புற சாலைகள் ஏற்படுத்தப்பட்ட பின் தீ அணைக்கும் கம்பங்கள் (Fire Hydrant Post) அமைக்கப்பட காலஅவகாசம் தேவைப்படுகிறது.

எனவே, மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டு கட்டிடடத்துறையால் மேற்படி பணிகள் நிறைவேற்றப்பட்ட பின் தீயணைப்பு வசதி செய்யும் பணிகள் செய்ய வேண்டியுள்ளதால் இப்பணிக்கான ஒப்பந்தபணி காலத்தை 31.01.2014 வரை நீட்டிப்பு செய்யலாம் என்று கருதப்படுகிறது.

மேலும் திருவாளர் M/s M.I. Industrial Products (P) Limited, Puducherry -க்கு வழங்கப்பட்ட பணி ஆணையின் விலை அடிப்படையில் விலை மாறுபாடு கோராமல் பணி நீட்டிப்பு காலம் வரை பணிகள் நிறைவேற்றப்படும் என 30.10.2013 அன்றைய தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, மேற்குறிப்பிட்ட விரிவான காரணங்களுக்காக இப்பணிக்கான ஒப்பந்த பணிகாலத்தை (EOT) 31.01.2014 வரை நீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.591/2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.610/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2190/2009**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 21.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.782/2013 **பொருள் எண்:50**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி – பணி கால நீட்டிப்புவழங்க அனுமதி**

தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பங்கள் பெறப்பட்டு 05.05.2010 அன்று திருவாளர்கள் ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு 10.06.2010 அன்று பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நடைபெறுகிறது. பணிகள் முடிக்க வேண்டிய காலம் 24 மாதங்கள், அதாவது 09.06.2012ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும். மேலும், மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் காரணத்திற்காக 6 மாத காலத்திற்கும், மின்சார கம்பிவடங்கள் கம்பங்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள் இணைப்புகள், போக்குவரத்து துறையினர் இரவு நேரங்களில் மட்டும் பணி செய்ய அனுமதி போன்ற காரணத்தினால் 6 மாத காலத்திற்கும் பணியில் சில இடர்பாடுகளினாலும், சேவைத்துறையினரின் பணிகளினாலும் மேலும் 5மாத கால நீட்டிப்பு வழங்கப்பட்டு தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு மூன்று முறை உரிய வழிமுறையாக 17 மாத கால நீட்டிப்பு ஆணை பெறப்பட்டது. இதன்படி, 30.11.2013ற்குள் பணி முடிவடையும் காலமாகும்.

தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் பணிகள் அனைத்தும் முடிவுரும் தருவாயில் உள்ளது என்றும் பிர்லா ப்ளானிட்டேரியம் பகுதியில் தற்போது அனுமதி பெற்று மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளதாகவும், இந்திரா நகர் 2வது நிழற்சாலையில் சென்னை குடிநீர் வாரியம் கழிவுநீர் அகற்றும் பணி மேற்கொள்வதால் இப்பணியில் தாமதம் ஏற்படுகிறது என்றும் வி.வி.கோயில் தெரு மற்றும் பம்மல் நல்லதம்பி தெருவில் பொதுப்பணித்துறையின் பணி நடைபெறுவதால் இப்பணியினை மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுகிறது என கூறியுள்ளனர். மேலும், மழைநீர் வடிகால்வாய் அமைத்து வரும் கே.பி.நகர் 6வது பிரதான சாலை, கே.பி.நகர் 1வது பிரதான சாலை, கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை (காமராஜர் நகர்), கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை அருகில் திருவான்மியூர் சிக்னல் குறுக்கே, இந்திரா நகர் 4வது நிழற்சாலை மற்றும் காலஷாத்ரா பிரதான சாலை பகுதிகளில் போக்குவரத்து காவல் துறையின் அனுமதி பெறாததால் பணி மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதன்படி இப்பணிகளை முடிப்பதற்கு மார்ச்' 2014 வரை இறுதியாக கால நீட்டிப்பு கோரியுள்ளனர்.

தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேலும் காந்தி மண்டபம் சாலையில் மழைநீர் அதிகமாக தேங்குவதாலும் வெகுமுக்கிய பிரமுகர்களின் முக்கியமான வழித்தடம் என்பதாலும், காவல் துறை அனுமதி கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதாலும், பல்வேறு சேவைத்துறையினரின் வடங்கள் செல்வதாலும், அதற்கு மாற்று வழி ஆராயப்பட்டு பிர்லா கோளரங்கம் வழியாக எடுத்து சென்று பக்கிங்காம் கால்வாயில் இணைக்க திட்டமிட்டு, கோளரங்கம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களின் தடையின்மை சான்று தற்போது பெறப்பட்டு, பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இந்திரா நகர் 2வது நிழற்சாலையில் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து பெருமளவில் கழிவுநீர் வெகுவாக மழைநீர்வடிகால்வாயில் வெளியேற்றப்படுவதால் பணி முடிப்பதில் காலதாமதம் அதிகம் ஏற்படுகிறது. தரமணி சாலையில் பொதுப்பணித்துறையின் பெருவழி கால்வாய் பணி நடைபெற்று வருவதால் வி.வி.கோயில் தெரு மற்றும் பம்மல் நல்லதம்பி தெருவில் தற்போது மழைநீர் வடிகால்வாய் இணைப்பு ஏற்படுத்துவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது, மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் கே.பி.நகர் 6வது பிரதான சாலை, கே.பி.நகர் 1வது பிரதான சாலை, கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை (காமராஜர் நகர்), கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை அருகில் திருவான்மியூர் சிக்னல் குறுக்கே, இந்திரா நகர் 4வது நிழற்சாலை மற்றும் காலஷோத்ரா பிரதான சாலை பகுதிகளில் போக்குவரத்து காவல் துறையின் அனுமதி பெற நடைவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதினை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இதனால் இப்பணிக்கு 30.11.2013 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.12.2013 முதல் நான்கு மாத காலத்திற்கு 31.03.2014 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

(1) திருவாளர்கள் ஆர்.பி.பி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் முழுவதுமாக முடிப்பதற்கு 30.11.2013 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.12.2013 முதல் 31.03.2014 வரை நான்கு மாத காலத்திற்கு இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,

(2) மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 01.12.2013 தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.596/2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.615/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.க.எண்.பி2/4450/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 21.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.783/2013 பொருள் எண்.51

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்– மழைகால முன்னெச்சரிக்கை நடவடிக்கை– தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரிய குடியிருப்பு பகுதிகளில் குப்பைஅகற்றுதல், சிமெண்டகான்கிரிட் சாலை அமைத்தல், கழிவுநீர் குழாய் பராமரித்தல் போன்ற பணிகளுக்கு தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரியம் நிதி கோரியுள்ளது– JnNURM – BSUP நிதி மற்றும் திடகழிவு மேலாண்மை துறையின் வருவாய் நிதியில் வைப்பு தொகை மூலம் வழங்குவதற்கு அனுமதி**

தலைமை செலாளர், தமிழ்நாடு அரசு அவர்களின் சீராய்வு கூட்டத்தில் தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரிய குடியிருப்பு பகுதிகளின் சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்தி சுகாதார முறையில் பராமரிக்க அறிவுறுத்தினார்கள்.

சீராய்வுகூட்டத்தில் தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரியத்தால், தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரிய குடியிருப்புபகுதிகளின் சுற்றுபுரத்தின் பரமாரிப்புபணிகளை மேற்கொள்ள போதிய ஆட்கள் , உபகரணங்கள் மற்றும் நிதிஆதாரம் இல்லை என தெரிவிக்கப்பட்டதால், சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள் வாரியத்திற்கு தேவையான நிதியை வழங்கலாம் என தெரிவித்துள்ளார்கள். இந்த கருத்தை அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற மேலாண்மை துறை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

மேற்கண்ட கூட்டத்தின் மேல்நடவடிக்கையாக, நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரியம் மற்றும் முதன்மை செயலர்/ ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்கள் 01.11.2013 அன்று கலந்து ஆலோசித்தபோது தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரிய குடியிருப்பு பகுதிகளில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் , சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி செய்தல் மற்றும் குப்பை அகற்றுதல், சேகரிக்கப்படும் குப்பைகளை சென்னை மாநகராட்சி குப்பைகொட்டும் வளாகங்களில் கொண்டு சேர்த்தல், போன்ற பணிகளை தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரியம் மூலம் செயல்படுத்திடவும் அதற்கு தேவையான நிதிஆதாரத்தை சென்னை மாநகராட்சி வழங்குவதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிசைப்பகுதிமாற்று வாரிய குடியிருப்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் உள்ள குப்பை அகற்றுவது குறித்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய பொறியாளர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி மண்டல உதவி ஆணையர்கள், பொறியாளர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் தற்போதுள்ள குப்பை சகதியுடன் இருப்பதால், மாநகராட்சி பணியாளர்களால் அகற்றுவது சிரமம் என்றும், ஏற்கனவே குடிசைமாற்று வாரியத்திடம் இது தொடர்பாக உள்ள பணியாளர்கள் குப்பைஅகற்ற ஈடுபடுத்திட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்து ரூ.1190.22 இலட்சங்கள் கீழ்கண்ட இனங்களுக்கு தேவைபடும் நிதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள் .

| வ. எண் | பணியின் விவரம் | தொகை (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | திட்டப்பகுதிகளில் குப்பை அகற்றுவதற்கு | ரூ.73.25 |
| 2. | சேகரிக்கப்பட்ட குப்பைகளை சென்னை மாநகராட்சி குப்பைகொட்டும் வளாகத்திற்கு கொண்டு சேர்ப்பதற்கு | ரூ.47.90 |
| 3. | குடியிருப்பு பகுதிகளில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு | ரூ.301.03 |
| 4. | கழிவுநீர் கால்வாய் பழுதுபார்தல் பணி | ரூ.394.73 |
| 5. | கழிவு நீர் கால்வாய் தொட்டி உயர்த்தி அமைத்தல் | ரூ.140.52 |
| 6. | டெங்கு விழிப்புணர்வு முகாம் | ரூ.5.00 |
| 7. | திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் மேம்படுத்துதல் | ரூ.108.40 |
| 8. | மேற்பார்வை செலவு | ரூ.119.39 |

மேற்கண்ட திட்டத்தை சென்னை மாநகராட்சி JnNURM-BSUP சேமிப்பு நிதியிலிருந்து விடுவிக்க முதன்மை செயலர்/ ஆணையர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

JNNURM-BSUP திட்டத்தில் இரண்டு கட்டங்களாக Phase -I மற்றும் Phase –II ரூ.200.07 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Phase –I திட்ட மதிப்பீடு ரூ127.44 கோடியில் 44 குடிசைபகுதிகள் தேர்வு செய்யப்பட்டு அதில் 1370 புதிய வீடுகள் கட்டும் பணியும் மற்றும் 236 குடிசைபகுதிகள் தேர்வு செய்து அப்பகுதிகளில் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

Phase-II திட்டமதிப்பீடு ரூ.72.63 கோடியில் 186 குடிசைபகுதிகள் தேர்வு செய்யப்பட்டு அப்பகுதிகளில் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

மேற்கண்ட பணிகள் JnNURM-BSUP Phase –I மற்றும் Phase –II நடைபெற்று வருகிறது. இதில் ரூ.17.38 கோடி சேமிப்பு நிதி உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சமர்பித்துள்ள திட்டஅறிக்கையில் 3 இனங்கள் (வரிசை எண்.3,4 மற்றும் 5) மட்டும் JnNURM-BSUP திட்டநிதியில் செயல்படுத்த முடியும். இதற்கான திட்டமதிப்பீடு ரூ.836.28 இலட்சங்கள் ஆகும். பிற இனங்கள் 1,2 ,6 மற்றும் 7 க்கான செலவினம் ரூ.234.55 இலட்சங்கள் திடக்கழிவு மேலாண்மை துறையில் வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம் எனவும் மற்றும் இனம் 8 மேற்பார்வை செலவுகளுக்கான மதிப்பீடுரூ.119.39 இலட்சங்கள் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியமே மேற்பார்வை செய்வதால் அதற்குண்டான தொகை வழங்க தேவையில்லை எனவும் கருதப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக 16.11.2013 அன்று துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களுடன் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய தலைமை பொறியாளர், மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினால் குப்பையை போக்குவரத்து செய்யமுடியாத நிலை உள்ளதாகவும் தெரிவித்து அதற்குரிய செலவினமாக கோரப்பட்டுள்ள ரூ.47.90 லட்சங்கள் வழங்க தேவையில்லை என்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரிய தலைமை பொறியாளர் தெரிவித்துள்ளார்கள்.

இதன்பொருட்டு மேற்குறிப்பிட்ட பணிகளில் திட்டப்பகுதிகளில் குப்பை அகற்றுவது, டெங்கு விழிப்புணர்வு முகாம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதார மேம்படுத்துதல் பணிகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக மேற்கொள்ள தேவைப்படும் ரூ.186.65 இலட்சங்கள் திடக்கழிவு மேலாண்மை துறையின் வருவாய்நிதியில் முதல்கட்டமாக வழங்கிடலாம் எனவும், பிறபணிகளான குடியிருப்பு பகுதிகளில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கும், கழிவுநீர் கால்வாய் பழுதுபார்தல் பணி மற்றும் கழிவு நீர் கால்வாய் தொட்டி உயர்த்தி அமைத்தல் பணி செய்வதற்காக ரூ.836.28 இலட்சங்கள் JnNURM-BSUP திட்டநிதியில் இரண்டாம் கட்டமாக வழங்கிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1. முதல்கட்டமாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு ரூ.186.65 இலட்சங்கள் திடக்கழிவு மேலாண்மை துறையின் வருவாய்நிதியிலிருந்து வைப்புநிதியாக வழங்கிடவும்.
2. இரண்டாம் கட்டமாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு ரூ.836.28 இலட்சங்கள் JnNURM-BSUP திட்டநிதியில் வழங்கிடவும்
3. மேற்குறிப்பிட்ட தொகையினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்வதற்கு நிதிநிர்வாக பிரிவு நடவடிக்கை மேற்கொள்ளவும்,
4. JUNURM-BSUP திட்டநிதி மத்திய அரசு மூலம் வழங்கப்பட்டு ஆணையர் நகராட்சி நிர்வாகம் கண்காணிக்கும் துறையாக செயல்படுவதால், அத்துறைக்கு தெரியப்படுத்தவும்

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண். 598/ 2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண். 617/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ப.து.ந.க.எண்/2970/2013**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.784/2013 **பொருள் எண். 52**

**சென்னை மாநகராட்சி நகர அபிவிருத்தி திட்டம் கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி நகர அபிவிருத்தி திட்டம் சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்வதற்கு முன் இத்திட்டம் அமைக்கப்பட்டது. தற்பொழுது சென்னை மாநகராட்சி எல்லைகள் விரிவாக்கப்பட்டு பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஜவஹர்லால் புனரமைப்பு–2 (Phase – II) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் பொருட்டு சென்னை மாநகராட்சி எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்ட நிலையில் தற்பொழுது புதிய நகர அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கொள்ளும் பணிகளுக்கு மூலதன நிதியின் கீழ் பணிகள் நடைபெறுகின்றது. இப்பணிகள் காலதாமதமின்றி சிறப்பாக மேற்கொள்வதற்கு கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்வதற்கு அவசியம் ஏற்படுகிறது.

எனவே சென்னை மாநகராட்சி அபிவிருத்தி திட்டம் பார்வையிடுவதற்கு ஒரு கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்வதற்கு குறிப்பிட்ட நிபந்தனையுடனும், ஒப்பங்கள் கோருவதற்கும் மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் இவர்களை சென்னை மாநகராட்சியில் கலந்தறிதற்குரியவர் நியமிப்பதற்கு நிலைகுழு (பணிகள்) மற்றும் நிலைகுழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.598/2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.616/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.5.ந.க.எண்.ஜி/10356/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 11.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.785/2013 **பொருள் எண்.53**

**மண்டலம்–5, பகுதி–13, வார்டு–55, எண்.61, புனித சேவியர் தெரு மற்றும் வி.வி.எம்.கோயில் தெரு சந்திப்பில் உள்ள தொகுப்பு குப்பை தொட்டியை அகற்ற அனுமதி**

திரு.ஆமினால் அவர்களின் வீட்டு அருகில் ஒரு தொகுப்பு குப்பை தொட்டி உள்ளது. இந்த தொகுப்பு குப்பை தொட்டி அமைக்கும்போது இதன் அருகில் உள்ள இடங்கள் காலியாக இருந்தது தற்பொழுது காலியான இடங்களில் வீடுகள் கட்டி தற்பொழுது குடியிருப்பு வீடுகளாக மாறியுள்ளது. மேலும் இங்குள்ள குடியிருப்புகளின் வாசற்படி இந்த தொகுப்பு குப்பை தொட்டியின் முன்புறம் உள்ளது. எனவே அங்கு குடியிருப்போர்களுக்கு வீட்டிற்கு உள்ளே சென்று வர இயலாத நிலையில் உள்ளது.

மேலும் இந்த தொகுப்பு குப்பை தொட்டியை அகற்றுவதற்கான செலவை இதன் அருகில் உள்ள குடியிருபோர் கொடுப்பதற்கு தயாராக உள்ளனர்.

மேற்கண்ட காரணங்களால் இந்த தொகுப்பு குப்பை தொட்டியை அகற்றுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 18.11.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.11.2013 அன்று தீர்மான எண்.598/2013,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது''.

> ''இந்த தொகுப்பு தொட்டியை இடித்து அப்புறப்படுத்துவதற்கு ஆகும் செலவு, மற்றும் இதனை வேறு இடத்தில் புதிதாக கட்டுவதற்கு ஆகும் செலவு முழுவதையும் வீட்டின் உரிமையாளர் ஏற்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''.

*******

**த.பொ(பொது)/ந.க.எண்.அ1/1813/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.786/2013 **பொருள் எண்.54**

**சாலைகள் பணிகள் மற்றும் பிற பணிகள் – தரத்துடன் விரைவாக மேற்கொள்ளுதல் – ஒப்ப விதிகளில் கூடுதல் நிபந்தனைகள் அமுல்படுத்திட அனுமதி**

சென்னை மாநகராட்சியில் மேம்படுத்துவதற்கு அதிகமான உட்புற சாலைகள் உள்ளன. அவை வரும் மே 2014 க்கு முன்பாக முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு குறுகிய காலத்தின், முடிக்க வேண்டிய நிலையில், பணியின் தரத்தினை, எவ்விதத்திலும், குறை ஏற்படாவண்ணம், பணியினை குறித்த ஒப்ப காலத்திற்குள்ளும் முடிப்பதற்கு, ஒப்ப வடிவத்தில், கூடுதலாக ஒப்ப நிபந்தனைகளை சேர்ப்பது அவசியமாகிறது.

இதனை கருத்தில் கொண்டு, ஒப்பவிதி திருத்த குழுமத்தில், இது குறித்து தீவிர ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, கீழ்கண்ட, கூடுதல் ஒப்ப நிபந்தனைகளை, சேர்க்கலாம் என்ற கருத்தில், ஒப்பவிதி திருத்த குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனவே,

1. சாலைப்பணிகள் மேற்கொள்ளும்பொழுது தொடக்கத்திலேயே மையத்தடுப்பு சுவர் (centre median kerb) மற்றும் நடைபாதை சுவர்(kerb) தார் கரை படாமல் தடுக்க தேவையானதடுப்புகள் மற்றும் பாதுகாப்பான மறைப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும். மேற்படி கரை ஏற்படின் ஒப்பந்ததாரர் 48 மணி நேரத்திற்குள் அவற்றை சரிசெய்து பழைய நிலைக்கு கொண்டுவரவேண்டும். தவறினால் ஒப்பந்ததாரருக்கு நாளொன்றுக்கு ஒரு சாலைக்கு ரூ.10,000/– அபராதம் விதிக்கப்படும். பணி மேற்கொள்ளும்பொழுது மையத்தடுப்பு சுவர் (centre median kerb) மற்றும் நடைபாதை சுவர்(kerb)கள் சேதமடைந்தால் அவற்றை சரிசெய்வதற்கான கூடுதல் செலவினத்தை ஒப்பந்ததாரர் ஏற்கவேண்டும்.
2. சாலைப்பணிகள் மேடு பள்ளங்கள் இன்றி சரியான சாய்வுடன் கலங்கமின்றி அமைய சாலைப்பணிகள் இரவில் மேற்கொள்ளும்பொழுது ஒப்பந்ததாரர் குறைந்தபட்சம் 30 லக்ஸ்(lux) வெளிச்சம் தரக்கூடிய சோடியம் ஆவி விளக்கு அல்லது மின் சேமிப்பு விளக்கு (LED) மற்றும் மின் ஆக்கியுடன் பொறியாளர் ஏற்றுக்கொள்ளும் வகையில் பொருத்துதல் வேண்டும்.
3. பணியிடத்தினை ஒப்படைக்கப்பட்ட 7 நாட்களுக்குள் இடையூறுகள் இருப்பின் அவற்றை பொறியாளருக்கு எழுத்துமூலமாக முன்னதாகவே தெரிவிக்கவேண்டும். அதன் நகலினை தலைமை பொறியாளர் அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கவேண்டும்.
4. மழை, இயற்கை சீற்றம், தேர்தல் மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளால் பணி தடைபட்டால் அதற்கு எழுத்துமூலமாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தெரிவித்து பணி தடைபடும் காலத்தினை ஒப்பந்த காலத்தில் சேர்க்காமல் இருக்க ஒப்புதல் பெறுதல் வேண்டும்.
5. ஒப்பந்த காலத்திற்கு பின்னர் காலநீட்டிப்பு செய்ய பின்வருமாறு அதிகாரம் வழங்கலாம். முதல் 30 நாட்களுக்கு சம்பந்தப்பட்ட செயற்பொறியாளருக்கு அதிகாரம் அளிக்கலாம். அடுத்த 60 நாட்களுக்கு சம்பந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு அதிகாரம் அளிக்கலாம். மேலும் கூடுதலாக 90 நாட்களுக்கு தலைமை பொறியாளருக்கு அதிகாரம் வழங்கலாம். மேலும் கால நீட்டிப்பு தேவைப்படின் மன்றத்தின் அனுமதியுடன் பெறப்படவேண்டும். துறை ரீதியான காரணங்கள்/தேர்தல்/இயற்கை சீற்றங்கள்/பணியிட நிலை(site condition)/திட்டத்தில் மாறுதல் ஆகிய காரணங்களால் காலதாமதம் ஏற்பட்டால் அபராதம் இல்லாமல் ஒப்பந்த கால நீட்டிப்பு வழங்கப்படும். காலநீட்டிப்பு தேவைப்படின் ஒப்பந்தகாலம் முடியும்முன்னர் பெறப்படவேண்டும். கால நீட்டிப்பு அளித்ததற்கு பின்னேற்பு, ஆணையரிடம் பெறப்படும் (Agreement executing authority).
6. மந்தமான பணி – ஒப்ப குறிப்பில் குறிப்பிட்டுள்ள கால நிர்ணயத்தின் படி ஒப்பந்ததாரர் பணியினை மேற்கொள்ள தவறும் பட்சத்தில், மந்தமான பணிக்கு ஒப்ப விதிகளின்படி அபராதம்

விதிக்கப்படும். அவ்வாறு விதிக்கப்பட்ட அபராதத்தை ஒப்பந்ததாரர் தக்க காரணங்களுடன் முறையிட்டால் அதனை மன்றம் மூலம் தளர்த்தலாம்.

7. **பேருந்து நிழற்குடை பணி** – தேவையான பருமன் உள்ளதுருப்பிடிக்காத எஃகினால் பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்படும்பொழுது அவற்றின் தரத்தினை பணியிடத்திலேயே ஆய்வு செய்யப்படவேண்டும். இதற்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கூடங்கள், இந்தியன் இன்ஸ்ட்டியூட் ஆஃப் டெக்னாலஜி, தமிழக அரசின் தொழில் மற்றும் வணிகத்துறையின் கிண்டியில் உள்ள ஆய்வுக்கூடம் மற்றும் National Testing Laboratories ஆகியவற்றினால் ஆய்வு மேற்கொள்ளவேண்டும்.

**சாலைப் பணிக்கு** மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள ஒப்ப நிபந்தனைகளை, இனிவரும் பணிகளுக்கான ஒப்பத்தில் கூடுதலாக சேர்ப்பதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “நிபந்தனை–5ஐ பொறுத்தமட்டில் ஒப்ப காலத்திற்கு பின் கால நீட்டிப்பு கோரும் இனங்களில் முதல் 10 நாட்களுக்கு சம்மந்தப்பட்ட பொறியாளருக்கு அதிகாரம் அளிக்கலாம், அடுத்த 10 நாட்களுக்கு சம்மந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு அதிகாரம் அளிக்கலாம், 20 நாட்களுக்கும் கூடுதலாக தேவைப்படின் அடுத்த 10 நாட்களுக்கு தலைமை பொறியாளர் அதிகாரம் வழங்கலாம். மேலும், கால நீட்டிப்பு தேவைப்படின் மன்ற அனுமதி பெறலாம். மொத்தத்தில் கால நீட்டிப்பு 30 நாட்களுக்கு மிகைப்படாமல் வழங்கலாம் என்ற மாறுதலுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கிறது”.

*******

**க.து.ந.க.எண்.பி6/0232/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 21.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.787/2013 பொருள் எண் : 55

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

**வார்டு எண் : 64** **மண்டலம் : 6**

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–6, வார்டு–64, கொளத்தூர், பள்ளிச் சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியின் தரைதளத்தில் வேதியியல் ஆய்வகம், முதல் தளத்தில் இயற்பியல் ஆய்வகம், இரண்டாம் தளத்தில் உயிரியல் ஆய்வகம், மூன்றாம் தளத்தில் கணினி ஆய்வகம் மற்றும் கழிப்பறைகள் கட்டும் பணி |
| மதிப்பீட்டின் எண். குழுவின் மன்றத்தின் தீர்மான எண்/நாள் | 2013–14 மன்றத் தீர்மான எண்.564/2013, நாள்.29.08.2013 |
| ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு | ரூ. 149.00 இலட்சம் 2013–2014 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள்.**05.09.2013**<br>மக்கள் குரல் தமிழ் நாளிதழ் நாள்.**05.09.2013**<br>இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள்.**05.09.2013** |
| ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 18.09.2013 |
| ஒப்பந்தப்புள்ளி எற்றுக்கொள்வதற்கானகடைசி நாள் | 20.09.2013 |
| ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது **15** நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | ஆறு |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திரு/ திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | **2013–2014** ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| | பாலாஜி கன்ஸ்ட்ரக்ஷன் | ரூ.1,28,32,207.89 | ரூ.1,35,37,979.32 | (+) 5.50 % அதிகம் |
| 2 | R.ராமாராவ் | ரூ.1,28,32,207.89 | ரூ.1,34,48,153.87 | (+) 4.80 % அதிகம் |
| 3 | சாம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.1,28,32,207.89 | ரூ.1,32,30,006.33 | (+) 3.10 % அதிகம் |
| 4 | R.தாமஸ் ஐயாதுரை | ரூ.1,28,32,207.89 | ரூ.1,31,65,845.30 | (+) 2.60 % அதிகம் |
| 5 | V.S.B.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.1,28,32,207.89 | ரூ.1,30,88,852.05 | (+) 2.00 % அதிகம் |
| 6 | வாஸ்கோ எண்டர்பிரைசஸ் | ரூ.1,28,32,207.89 | ரூ.1,29,60,529.97 | (+) 1.00 % அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம். பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட நாள் 27.09.2013 |
| பேச்சுவார்த்தைக்குப்பின் / ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் | ரூ.1,29,60,529.97 (+) 1.00% அதிகம் 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள். வாஸ்கோ எண்டர்பிரைசஸ் |

| | |
|---|---|
| இறுதி ஒப்பந்தத்தொகை | ரூ.1,29,60,529.97 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து அறுபதாயிரத்து ஐந்நூற்று இருபத்து ஒன்பது மற்றும் தொண்ணூற்று ஏழு பைசா மட்டும்) |
| இறுதி ஒப்ப சதவிகிதம் (2013-14 ஆம் ஆண்டின் விலைப்படி) | (+) 1.00% அதிகம் |
| இறுதி ஒப்ப சதவிகிதம் (2013-14 ஆம் ஆண்டின் திருத்திய அலுவலக விலைப்படி) | (-) 0.67% குறைவு |
| பணிக்கான நிதி ஆதாரம் | மூலதனநிதி – கட்டடத்துறை **2013–2014** |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | **19.12.2013** |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான **20.09.2013** அன்று ஆறு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். வாஸ்கோ எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்ப விழுக்காடு (+)1.00% அதிகம் மற்றும் ஒப்பத்தொகை ரூ.1,29,60,529.97 ஆகும்.

இது **2013–2014**ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,28,32,207.89யைவிட (+)1.00% அதிகமாகும். மேலும், **2013–2014**ஆம் ஆண்டின் திருத்திய அலுவலக விலையுடன் (பணி மதிப்பீட்டுத் தொகை ரூ.**1,30,47,350.69**) ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்ப விழுக்காடு (-) 0.67% குறைவாக உள்ளது. எனவே, 27.09.2013 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் தன் ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளார்.

மன்றத்தீர்மானம் எண்.512/2007 நாள்.25.09.2007ன்படி சந்தை விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இப்பணியின் சந்தை மதிப்பு ரூ.1,46,81,545.39 ஆகும். The Hindu (Habitat) dated 29.09.2013 தேதியிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகையான ரூ.1,29,60,529.97 (-) 11.73% குறைவாக உள்ளது.

மேலும் 13.11.2013 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,29,60,529.97க்கான அதாவது 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)1.00% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். வாஸ்கோ எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ரூ.1,29,60,529.97 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து அறுபதாயிரத்து ஐந்நூற்று இருபத்து ஒன்பது மற்றும் தொண்ணூற்று ஏழு பைசா மட்டும்) அதாவது **2013–2014**ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட **(+) 1.00**% அதிகம், மேலும் **2013–2014**ஆம் ஆண்டின் திருத்திய அலுவலக விலையைவிட (-) 0.67% குறைவான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். வாஸ்கோ எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி **1919** ல் விதி **80(2)** ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.11.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **22.11.2013** அன்று தீர்மான எண். **600/ 2013**,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.11.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **22.11.2013** அன்று தீர்மான எண். **618/2013**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி7/3221/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 20.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.788/2013 பொருள் எண் :56

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

வார்டு எண் : 91 மண்டலம் : 7

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–7, வார்டு–91, மேற்கு முகப்பேர் 3வது பிரதான சாலையில் சமுதாய நலக்கூடம் கட்டும் பணி |
| மதிப்பீட்டின் எண். குழுவின் மன்றத்தின் தீர்மான எண்/நாள் | 2013–14 மன்றத் தீர்மான எண்.630/2013, நாள்.28.09.2013 |
| ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு | ரூ. 132.00 இலட்சம்<br>2013–2014 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள்.03.10.2013<br>தினமணி தமிழ் நாளிதழ் நாள்.04.10.2013<br>இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் நாள்.04.10.2013 |
| ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 15.10.2013 |
| ஒப்பந்தப்புள்ளி எற்றுக்கொள்வதற்கானகடைசி நாள் | 18.10.2013 |
| ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ எ ண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திரு/ திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | **2013–2014** ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | T.ராமசாமி | ரூ.1,12,96,115.37 | ரூ.1,17,46,830.37 | (+) 3.99 % அதிகம் |
| 2 | யோகலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.1,12,96,115.37 | ரூ.1,10,50,989.67 | (-) 2.17 % குறைவு |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம். பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட நாள் 23.10.2013 |
| பேச்சுவார்த்தைக்குப்பின் / ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் | ரூ.1,10,50,989.67 % (-) 2.17 குறைவு 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள். யோகலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| இறுதி ஒப்பந்தத்தொகை | ரூ.1,10,50,989.67 (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சத்து ஐம்பதாயிரத்து தொன்னூற்று எண்பத்து ஒன்பது மற்றும் அறுபத்தேழு பைசா மட்டும்) |
| இறுதி ஒப்ப சதவிகிதம் (2013-14 ஆம் ஆண்டின் விலைப்படி) | (-) 2.17% குறைவு |
| பணிக்கான நிதி ஆதாரம் | மூலதனநிதி – கட்டடத்துறை **2013–2014** |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | **17.01.2014** |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 18.10.2013 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். யோகலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்ப விழுக்காடு (–)2.17% குறைவு மற்றும் ஒப்பத்தொகை ரூ.1,10,50,989.67 ஆகும். இது 2013-2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,12,96,115.37 யைவிட (–)2.17% குறைவாகும். எனவே. 23.10.2013 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை மேலும் குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இதன் படி குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். யோகலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்பத் தொகை ரூ.1,10,50,989.67 மற்றும் ஒப்ப விழுக்காடு (–)2.17% குறைவாகும்.

மன்றத்தீர்மானம் எண்.512/2007 நாள்.25.09.2007ன்படி சந்தை விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இப்பணியின் சந்தை மதிப்பு ரூ.1,25,77,668.37 ஆகும். The Hindu (Habitat) dated 18.10.2013 தேதியிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகையான ரூ.1,10,50,989.67(-) 12.14% குறைவாக உள்ளது.

மேலும் 07.11.2013 அன்று ஒப்ப ஆய்வுக்குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,10,50,989.67க்கான அதாவது 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (–)2.17% குறைவான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். யோகலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ரூ.1,10,50,989.67 (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சத்து ஐம்பதாயிரத்து தொன்னூற்று எண்பத்து ஒன்பது மற்றும் அறுபத்தேழு பைசா மட்டும்) அதாவது 2013-2014ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (–)2.17% குறைவான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். யோகலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **18.11.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **22.11.2013** அன்று தீர்மான எண். **601/ 2013**,ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.11.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **22.11.2013** அன்று தீர்மான எண். **619/2013**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ12/1762/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 21.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.789/2013 பொருள் எண்.57

**சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீரகற்றும் வாரியம் – தலைமை அலுவலக விரிவாக்கத்திற்காக அருகில் உள்ள மாநகராட்சி பொது நிலத்தை நில உரிமை மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு துறப்பு செய்ய மன்றத்தின் அனுமதி**

மேலாண்மை இயக்குநரின் நேர்முக கடிதத்துடன் 06.05.2013 அன்று வரிவிதிப்பு மேல்முறையீடு தீர்ப்பாயம் தொடர்பாக நடைபெற இருந்த ஒருங்கிணைப்பு குழுவில் விவாதிக்கப்படவுள்ள விவரங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் அனுப்பப்பட்டுள்ளது. அந்நிகழ்ச்சி நிரல் வரிசை எண்–9ல் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீரகற்றும் வாரியத்திற்கு சொந்தமான 1) 86, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை நுங்கம்பாக்கத்தில் உள்ள 130.90 ச.மீ நிலம் 2) 15, புலியூர் நெடுஞ்சாலை டிரஸ்ட்புரம் கோடம்பாக்கத்தில் உள்ள 125 ச.மீ நிலம் 3) சென்னை 80 கொரட்டூர் 31வது தெருவில் 103 ச.மீ நிலம் ஆகியவற்றை அம்மா உணவகம் செயல்படுத்துவதற்காக சென்னை மாநகராட்சிக்கு நில மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து தற்போது சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீரகற்றும் வாரியம் தலைமை அலுவலகம் விரிவாக்கம் செய்ய இருப்பதால், இதனை ஒட்டி அருகில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மின்சார பொருட்கள் மற்றும் இதர தளவாடங்கள் வைக்கப்பட்டுள்ள 1857 ச.மீ நிலத்தை நில மாற்றம் செய்ய பொருள் குறிக்கப்பட்டுள்ளது. இப்புலம் திருவல்லிக்கேணி கிராமத்தில் அளவை எண். 3362 (ப)–இல் அமைந்துள்ளது.

மேற்காணும் இடத்தை ஒதுக்கீடு செய்ய இயலுமாயின் அதன் பரப்பு, விவரங்கள், பயன்பாட்டுத்தன்மை, வரைப்படம் உள்ளிட்ட விவரங்களுடன் விரிவான அறிக்கையை இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு இத்துறையின் இதே எண்ணிட்ட குறிப்பு மூலம் மண்டல அலுவலர்–5, மேற்பார்வை பொறியாளர்(மின்சாரம்) ஆகியோரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் மேற்பார்வை பொறியாளர்(மின்சாரம்) 04.07.2013 நாளிட்ட குறிப்பில் மின்துறை பண்டகசாலை நீண்ட நெடுங்காலமாக மேற்கூறிய இடத்தில் செவ்வெனே இயங்கி வரும் சென்னை மாநகராட்சியின் ஒரே மின் பண்டகசாலையாகும் என்றும் தெரு விளக்குகள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு மாநகராட்சி முழுவதற்கும் / இப்பண்டக சாலையின் இருப்பிலிருந்துதான் தேவைப்படும் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் தற்போது சென்னை மாநகராட்சி, பெரு மாநகராட்சி ஆனதன் காரணமாக விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள தெரு மின்விளக்குகள் பராமரிப்புக்குத் தேவைப்படும் பொருட்களை கூடுதலாக வாங்கி வழங்க வேண்டியிருப்பதால், மின்சார பொருட்கள் மற்றும் இதர தளவாடங்கள் வைக்கப்பட்டுள்ள 1857 ச.மீ நிலம் போதுமானதாக இல்லை என்றும் தெரிவித்து, மாநகராட்சிக்கு சொந்தமான (1857 ச.மீ) நிலத்தை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம் தலைமை அலுவலக விரிவாக்கத்திற்கு ஒதுக்கீடு செய்யக் கோரியதை ஏற்க இயலாத நிலை இருக்கின்றது என தெரிவித்துள்ளார்.

மேலும், 5–வது மண்டல அலுவலர் தனது குறிப்பில் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீரகற்றும் வாரியம் தலைமை அலுவலகத்திற்கு அருகில் உள்ள பகுதி சென்னை மாநகராட்சியின் வார்டு அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகமாகவும், சென்னை மாநகராட்சி Central Yard-ன் ஒரு பகுதி துப்புரவு சாதனங்கள் இருப்புக்காக பயன்படுத்தப்பட்டும், பணித்துறையின் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டும் பயன்பாட்டில் இருந்து வருவதாலும், வார்டு–62, சிந்தாதரிப்பேட்டை பகுதியில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடங்கள் வேறு எதுவும் இல்லாத காரணத்தினால், அவசர, அவசியத்திற்கு இந்த இடம்தான் பயன்படுத்தும் நிலையில் உள்ளதாலும், மாமன்ற உறுப்பினர் இவ்விடத்தில் மாநகராட்சி மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் சில மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த முன்மொழிந்திருப்பதால் இந்த இடம் சென்னை மாநகராட்சிக்கு தேவைப்படுவதாலும், சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீர் அகற்று வாரியத்தினால் கோரப்பட்டுள்ள 1857 ச.மீ நிலத்தினை வழங்க இயலாது என்று தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான **1857** ச.மீ நிலம் எதிர்கால மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்த சென்னை மாநகராட்சிக்கு தேவையாக இருப்பதால் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீரகற்றும் வாரியத்திற்கு அந்நிலத்தை வழங்க இயலாத நிலை உள்ளது என தெரிவிக்க முதன்மை செயலர் / ஆணையர் அவர்களுக்கு இத்துறையின் **26.07.2013** நாளிட்ட குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர், குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீரகற்றும் வாரியம் மேலாண்மை இயக்குநர், துணை ஆணையர்/வமநி, மாவட்ட வருவாய் அலுவலர்/நிமஉது, மண்டல அலுவலர்–5 ஆகியோரால் அவ்விடத்தில் **06.08.2013** அன்று களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது 5–வது மண்டல அலுவலரின் **26.10.2013** நாளிட்ட குறிப்பில் **06.08.2013** கூட்டாய்வுக்கு பின் மாநகராட்சியின் தேவையை கருத்தில் கொண்டு மண்டலம்–5, வார்டு–62 ஆதிகேசவலு தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மத்திய தொழிற்கூடத்தின் அலுவலகம் மற்றும் நிரந்தர இருப்பு அறைகளை தவிர்த்து தற்காலிக கூரையுடன் கூடிய காலி இடம் **1056** ச. மீ. பரப்பு நிலத்தையும் உலோகக் கூடத்தின் ஒரு பகுதி **689.50** ச. மீ. பரப்பு நிலத்தையும் ஆக மொத்தம் **1745.50** ச. மீ நிலத்தை சென்னை குடிநீர் வாரியத்திற்கு ஒப்படைக்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கண்டவற்றின் அடிப்படையில் மண்டலம்–5, வார்டு–62, ஆதிகேசவலு தெருவில் உள்ள சென்னை மாநகராட்சக்கு சொந்தமான, திருவல்லிக்கேணி கிராமம் அளவை எண்.3362 (பகுதி)–இல் அமைந்துள்ள 1745.50 (18,788 ச. அடி) மாநகராட்சி (பொது) நிலத்தை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தலைமை அலுவலத்துக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய 5–வது மண்டல வார்டுக்குழு பரிந்துரையினை எதிர்நோக்கி சென்னை மாவட்ட ஆட்சியர்க்குத் துறப்பு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.11.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **22.11.2013** அன்று தீர்மான எண்.**613/2013**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''நாம் சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் அடிப்படையில் ஒப்படைக்கப்பட உள்ள **1745.50** ச.மீ. நிலத்திற்கு மாற்றாக, அவர்களால் ஏற்கனவே அம்மா உணவகத் தேவைகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ள **358.90** ச.மீ. நிலம் போக மீதமுள்ள **1386.60** ச.மீ. நிலத்திற்கு மாற்றாக சென்னை மாநகராட்சியின் தேவைக்கு சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் நிலம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''.

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ3/4176/2013**

**முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் 21.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.790/2013 பொருள் எண்.**58**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் நியாயவிலை கடைகளுக்கு மண்டலம்–9, வார்டு–116, வெங்கட்ரங்கம் தெருவில் உள்விளையாட்டு அரங்க கட்டிடத்தை ஒதுக்கீடு செய்ய அனுமதி**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் மண்டல மேலாளரின் **05.09.2013** நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் நியாயவிலை கடை (ஏ.என்.**005**) தற்போது மண்டலம்–**9**, வார்டு–**116**, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும் அக்கட்டிடத்தை இடிக்க வேண்டியுள்ளதால் உடனடியாக காலி செய்திட தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது. மேற்படி கடைக்கு மாற்று இடம் மண்டலம்–**9**, பகுதி–**27**, வார்டு–**116**, வெங்கட்ரங்கம் தெருவில் உள்ள உள்விளையாட்டு அரங்க கட்டிடத்தை மாத வாடகை அடிப்படையில் சென்னை மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு வழங்குமாறு கோரியுள்ளார்.

**9**–வது மண்டல அலுவலரின் குறிப்பில் மண்டலம்–**9**, பகுதி–**27**, வார்டு–**116**, வெங்கட்ரங்கம் தெருவில் உள்ள உள்விளையாட்டு அரங்க கட்டிடத்தை மாத வாடகை / குத்தகைக்கு சென்னை மாநகராட்சி விதிகளுக்கு குட்பட்டு வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் பெற தேனாம்பேட்டை **9**–வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.**556/2013**, நாள்.**12.09.2013**–இன்படி பரிந்துரைத்துள்ளார். இதனைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சி அரங்க அலுவலர் உள்விளையாட்டு அரங்கத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்வது குறித்து மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் மன்றத் தீர்மானம் எண்.**312/2013** நாள்.**22.05.2013**–ல் பொது மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைகளுக்கு இனி வரும் காலங்களில் சதுர அடிக்கு வாடகை ரு.**5/**– என்றே நிர்ணயம் செய்யலாம் என்று மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே, மண்டலம்–**9**, பகுதி–**27**, வார்டு–**116**, வெங்கட்ரங்கம் தெருவில் பயன்பாட்டில் இல்லாத **16×13=208** சதுர அடி கொண்ட உள்ள உள்விளையாட்டு அரங்க கட்டிடத்தை மன்றம் நிர்ணயித்துள்ள சதுர அடிக்கு ரூ.**5/**– வீதம் **208 × 5** = ரூ.**1040/**– என மாத வாடகையாகவும் **12** மாத வாடகை முன்பணம் ரூ.**1040 × 12** = ரூ.**12,480/**– தொகையினை செலுத்த வேண்டும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யயிருப்பின் மாநகராட்சியின் முன் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும், ஆகிய நிபந்தனைகளுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வணிப கழகத்திற்கு நியாய விலை கடை நடத்துவதற்கான ஒதுக்கீடு செய்ய நிலை குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **19.11.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **22.11.2013** அன்று தீர்மான எண்.**612/2013**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**செ.மா.ம.அ.3.ந.க.எண்.அ3 /3849 /2013**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 19.11.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.791/2013 **பொருள் எண்.59**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

**12.12.2012** நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திரு.எம்.அண்ணாமலை, உதவி செயற் பொறியாளர், மண்டலம்–**3**, அவர்கள் **30.11.2013** அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற உள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் **08.03.1977** அன்று ஓவர்சீயர் ஆக பணியமர்வு செய்யப்பட்டார். **29.06.1979** ல் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். **23.09.2011** முதல் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணியாற்றி வருகிறார். தனியர் பணியாற்றிய அனைத்து துறை மற்றும் மண்டலங்களிலிருந்தும் ஒழுங்கு நடவடிக்கை, தணிக்கைத்தடைகள் மற்றும் முன் பண நிலுவைகள் ஏதேனுமிருப்பின் அதனை இத்துறைக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க, தனியர் ஓவர்சீயராகவும், இளநிலை பொறியாளராகவும், உதவி செயற்பொறியாளராகவும் பணியாற்றிய வெவ்வேறு துறை மற்றும் மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட தணிக்கைச் சான்று மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்த விவரங்கள் கீழே அட்டவணைபடுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவி | துறை / மண்டலம் | பணியாற்றிய காலம் | | நடப்புக் கோப்பு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| | | | முதல் | வரை | |
| 1 | ஓவர்சீயர் | (D.O.North) பழைய மண்டலம்–5, புதிய மண்டலம் –8 | 08.03.1977 | 28.06.1979 | 25 |
| 2 | இளநிலை பொறியாளர் | (D.O.North) பழைய மண்டலம்–5, புதிய மண்டலம் –8 | 29.06.1979 | 10.09.1988 | 25 |
| 3 | இளநிலை பொறியாளர் | பழைய மண்டலம்–1, புதிய மண்டலம் –4 | 11.10.1988 | 10.11.1992 | 27 |
| 4 | இளநிலை பொறியாளர் | கட்டிடத்துறை | 11.11.1992 | 30.05.1995 | 29 |
| 5 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–10 (பழைய மண்டலம்–8) | 31.05.1995 | 10.07.1996 | 151 |
| 6 | இளநிலை பொறியாளர் | கட்டிடத்துறை | 11.07.1996 | 21.08.1996 | 29 |
| 7 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–6 (பழைய மண்டலம்–3) | 21.08.1996 | 07.04.1997 | 33 |
| 8 | இளநிலை பொறியாளர் | நகரமைப்பு பிரிவு (தலைமையிடம்) | 08.04.1997 | 24.09.2000 | 35 |
| 9 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–5 (பழைய மண்டலம்–2) | 25.09.2000 | 23.11.2000 | 37 |
| 10 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–6 (பழைய மண்டலம்–4) | 24.11.2000 | 24.09.2001 | 33 |
| 11 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–6 (பழைய மண்டலம்–3) | 25.09.2001 | 02.11.2001 | 33 |
| 12 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–4 (பழைய மண்டலம்–1) | 03.11.2001 | 23.01.2003 | 39 |
| 13 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–6 (பழைய மண்டலம்–4) | 24.01.2003 | 12.02.2008 | 33 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–8 (பழைய மண்டலம்–5) | 13.02.2008 | 22.09.2011 | 25 |
| 15 | உதவி செயற்பொறியாளர் | கட்டிடத்துறை (மாற்று பணி பேரூந்து சாலைகள் துறை) | 23.09.2011 | 02.07.2012 | 41 |
| 16 | உதவி செயற்பொறியாளர் | புதிய மண்டலம்–3 | 03.07.2012 | இதுநாள் வரை | தணிக்கை செய்யப்பட வில்லை |

மேலும், தனியர் உதவி செயற்பொறியாளராக மண்டலம்–3ல் பணியாற்றிய 03.07.2012 முதல் ஓய்வு பெறும் நாள் வரையிலான காலத்திற்கு தணிக்கை முடிவுறாத காரணத்தால் தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை. இருப்பினும் அன்னாரை வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிப்பதில் ஆட்சேபணை ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் தற்போது உறுப்பினராக இல்லை எனச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் அன்னாரது ஓய்வூதிய பணப்பயன்கள் குறித்தான தணிக்கைச் சான்று, சென்னை மாநகராட்சி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலிருந்து பெறப்பட்டுள்ளது.

04.11.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் மேற்குறிப்பில், தனியர் மீது விழிப்புத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் தனியர் வகித்து வரும் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் அமைந்துள்ளதால் தனியரை ஓய்வு பெற அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.எம்.அண்ணாமலை, உதவி செயற்பொறியாளர், மண்டலம்–3 அவர்களை தணிக்கைத் தடை மற்றும் சென்னை மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதியிழப்பீடுகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதில் அடங்கிய தொகையினை இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைக்குட்படுத்தி, அன்னாரை 30.11.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******